UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICAL DIVISION

புதிய சமதர்மம்
புதிய உலகம் படைப்போம்
Puthiya samadharam

இதழ் 94 | மே-ஜூன் 2010 | விலை ரூபா 20/=

**எமது போராட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்**

காணாமற் போனோரை தேடியறியும் குழு யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோர் தொடர்பான போராட்டத்தை நடத்த உள்ளது. எனவே காணாமல் போனவர்களின் குடுபத்தினர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். காணாமற் போனோரை தேடியறியும் குழு இல. 17, பெரக் ஒழுங்கை, கொழும்பு 02. தொ.பே. 2430621.

# சரணாகதி வேண்டாம்!

தமிழ் தேசிய கூட்டமைப்பு, மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில், தமிழ் மக்களின் அடிப்படை அம்சங்கள் எதையும் விட்டுக் கொடுக்கக் கூடாது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், இப்பகுதியின் காணி ஆதிகாரம், பொலிஸ் அதிகாரம் என்பவை அடிப்படையாக இருக்க வேண்டும்.

இவற்றில் எதையும் விட்டுக் கொடுக்க. முடியாதது அகும். இந்திய அரசின் நலன்களுக்காகவோ, சிக்கலில் திண்டாடும் மகிந்த ராஜபக்ஷவுக்கு உதவுவதற்காகவோ பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. தமிழ் மக்களுக்கு எத்தகைய உரிமையும் வழங்கக் கூடாது என்பதே பேரினவாத சக்திகளின் நிலைப்பாடாக உள்ளது. அந்த சக்திகளுக்கு தலைமைதாங்கும் மகிந்த ராஜபக்ஷவும் அந்த நிலைப்பாட்டையே பிரதி பலிக்கின்றார். முன்னை நாள் சிங்கப்பூர் பிரதமர் இலங்கை அரசின் ஆட்சித்தலைமையின் தன்மையை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

வரலாறு முழுவதும் தென் இலங்கை பேரினவாத தலைமைகள் தமிழ் தலைமைகளை ஏமாற்றியதே வரலாறு ஆகும். இந்த வலாற்று பாடத்தை நாம் மறந்துவிடக் கூடாது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அடுத்த கட்ட போராட்டத்தை பற்றியே சிந்திக்க வேண்டும். அதை தவிர்த்து இந்திய ஆட்சி பீடத்துடனோ இலங்கையின் பேரினவாதத்துடனோ உறவு கொண்டு போராட்டத்தை திசை திருப்ப ஒரு போதும் முயலக் கூடாது

இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அனமைக்கால செயற்பாடுகள்தமிழ் மக்கள் மத்தியில் சந்தேகத்தை உருவாக்கி உள்ளது. இவர்கள் தமிழ் மக்களை சரணாகதி அரசியல் பக்கம் நகர்த்துவதாக பலரும்விசனம் தெரிவித்து வருகின்றனர். தமிழ் மக்களின் 60 வருடகால போராட்ட வரலாற்றில் எமது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தப்பட்டு வரப்பட்டுள்ளது. இதில் இருந்து விலகியவர்கள் யாவரும் மக்களால் நிராகரிக்கப் பட்டதே வரலாறு ஆகும். அண்மைய பாராளுமன்ற தேர்தலில் 80% விகிதத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் தேர்தலை பகிஸ்கரித்துள்ள நிலையில், தமிழ் தேசிய கூட்டமைப்பு பதவிகளை பெற்றுக் கொண்டது. எனவே போராட்ட நிலையை வலியுறுத்தும் தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை புரிந்து செயற்படுவதே தமிழ தேசிய கூட்டமைப்பின் பிரதான பணியாக அமையவேண்டும்.




காணாமற் போனோரைதேடியறியும் குழு 24-05-2010ல் வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக நடத்திய மறியல் போராட்டத்தில் தமது உறவினர்களை தேடி சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கோண்ட ஒரு பகுதியினரை மேலே உள்ள படத்தில் காண்கின்றீர்கள்.

## இந்திய அழுத்தத்திற்கு அடங்கினார் மகிந்த ராஜபக்ஷ

இந்தியாவுக்கு அடிமைப்பட மாட்டோம். இந்தியப பெரியண்ணன் போல் நடக்காது சிறிய தங்கை போல் நடக்க வேண்டும் என வீறாப்பு பேசிய ராஜபக்ஷ இறுதியில் இந்தியாவுடன் 7 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

இன்று இந்தியா உலகமயமாக்கலின் பிராந்திய முகவராகவே செயற் படுகின்றது பல்தேசிய கம்பனிகளின் நிகழ்ச்சி நிரலை முன் எடுப்பதில் இந்தியா இன்று முக்கிய பங்கை வகிக்கிறது. எனவே ஒப்பந்தத்தின் ஊடாக பல்தேசியக் கம்பனிகளின் நலன்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பாகும்.

இங்கே தமிழ் மக்களின் பிரச்சினைகள் பேசப்பட்டாலும், அது முக்கியமானது என்று இந்தியா கருதவில்லை. ஆனால் இந்த அளுத்தங்கள் ஊடாக பல்தேசிய கம்பனிகளின் நலன்கள் பாதுகாக்கப்படுவதே உண்மை நிலையாகும். 1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு இந்திய இடதுசாரிகளின் ஆதரவு பெறப்பட்டது.இன்று அத்தகைய நிலையில் இந்தியா இல்லை. ஏகாதிபத்திய சக்திகளுடன் ஏகாதிபத்திய நலன்களுக்காக இந்தியா செயற்படுகின்றது என்பதே உன்மையாகும்.

## பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் கொலைவெறியை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

பலஸ்தீனத்தில் இன்று இஸ்ரேல் எவருக்கும் பயப்படாமல் கொலை வெறி செயற்பாடுகளை புரிந்து வருகின்றது. அண்மையில் நிவாரணக் கப்பல் ஒன்றை தாக்கியதுடன் அதில் பயணித்தவர்களையும் கொலை செய்துள்ளது. பலஸ்தீன மக்களை கொன்றழிப்பதன் மூலம் அம்மக்களின் சுதந்திரக் கோரிக்கையை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேல் முயல்கிறது.

கடந்த வருடம் முள்ளி வாயக்கால் படுகொலை மூலம் 40000 மேற்பட்ட தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர் இதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை இலங்கை அரசாங்கம் நசுக்கியது. இத்தகைய முயற்சிகளில் இன்று இஸ்ரேலும் ஈடுபட்டு வருகின்றது.

இலங்கையில் இஸ்ரேல் செயற்பாடுகள் திரைமறைவில் அதிகரித்து காணப்படுகின்றது. ஒரு தேசிய இனத்தின் சுதந்திரக் கோரிக்கையை எப்படி ஒடுக்குமுறை மூலம் முடிவுக்கு கொண்டு வரலாம் என்ற அனுபவம் இஸ்ரேலுக்கு வழங்கப் படுகின்றதா என்ற சந்தேகம் தற்போது வலுப்பெறுகின்றது.

பலஸ்தீன மக்கள் மீதான தாக்குதலுக்கு எதிராக இன்று உலகம் முழுவதும் கண்டனங்கள் எழுந்துள்ளன. இஸ்ரேலின் காட்டு மிராண்டி தனத்தை இடதுசாரி விடுதலை முன்னணி வன்மையாக கண்டிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லையே



கொம்பனித் தெரு பகுதியில், மியூஸ் வீதியில் அமைந்திருந்த 22 குடியிருப்புக்களை, அரசாங்கம் இடிந்து தள்ளுவதற்கு எடுத்திருந்த நடவடிக்கைகள் ஜனநாயக மாண்புகளை மதிக்கும் எவரையும் நிலைகுலையவைக்கும்.

அந்த குடியிருப்புக்களை விட்டு வெளியேறுமாறு மூன்று நாட்கள் அவகாசம் மட்டுமே அரசாங்கம் வழங்கியிருந்தது. மாற்று ஒழுக்குகள் எதுவும் உறுதியான முறையில் ஒழுங்கு செய்யப்படாத நிலையில் நட்ட ஈட்டுக்கான நிதிக் கொடுப்பனவுகள் எதுவும் இந்தக் குடியிருப்பாளருக்கு வழங்கப்படவில்லை. பாலத்துறையில் இருக்கும் பலகை வீடுகளுக்கு போங்கள் என்ற சமாதானம் இந்த மக்களுக்கு பொருந்துமா என்பதுதான் இங்கு இருக்கும் முக்கிய கேள்வியாகும்.

80 வருடங்களுக்கு மேலாக பல தலைமுறைகளாக வாழந்து வரும் இம்மக்கள் தமது குடியிருப்புக்கான சட்டரீதியான சகல தகைமைகளையும் கொண்டிருந்தனர். மேற்படி குடியிருப்புக்களுக்கு அருகே அமைந்திருக்கும் இலங்கை இராணுவத்தின் பிள்ளைகளின் கல்விக்காக கட்டப்பட்டு வரும் பிரமாண்டமான நவீன கல்லூரிக்கு இக் குடியிருப்புக்கள் தடையாக இருப்பதால், பொலிவற்று இருப்பதால் இடித்துத் தள்ளுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதே உண்மையாகும்.

நகர அபிவிருத்தி அதிகார பிரிவு இன்று பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருப்பதால் இராணுவம் நினைக்கும் எதையும் செய்யலாம். என்ற நிலை தலைவிரித்தாடுகிறது.

அன்றைய தினம் கனரக வாகனங்கள் சகிதம் அவ்விடத்துக்கு பொலிசாரின் பாதுகாப்புடன் வந்த அதிகாரிகள் மக்களை வெளியேறுமாறு கோரினர். மக்கள் வெளியேற மறுத்து வீடுகளுக்கு முன்னால் தமது குடும்பத்தினருடன் அமர்ந்திந்தனர். குழந்தைகள், முதியவர்கள் அழுத வண்ணம் அமர்ந்து இருந்தனர். சில மணி நேரத்தில் ஆயிரக் கணக்கில் பொலிசார், இராணுவத்தினர், விமானப்படையினர், விசேட நகர பாதுகாப்பு பிரிவினர் அவ்விடத்தில் குவிக்கப்பட்டு சுனாமிப் பேரலைபோல் மக்களை தாக்கும் வேகத்துடன் மக்கள் இருந்த பகுதிக்கு பாய்ந்து வந்தனர். அப்பாவி மக்களால் என்ன செய்யமுடியும். பயத்தால் ஒதுங்கினர். உயர் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக மக்களை பொருட்களை எடுக்குமாறு பணித்தனர் உயிரற்ற ஜீவன்களாக மக்கள் தமது பொருட்களை சுமந்து சென்றனர். அன்று மாலைக்குள் கட்டிடங்கள் தரைமட்டம் ஆக்கப்பட்டன.

எந்த அரசியல் வாதிகளும் அப்பகுதிக்கு வரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் மாகாணசபை உறுப்பினர் மு.ஜி.பூர்ரகுமான் ஓரமாக நின்றுகொண்டு இருந்தார். பின்னர் அவரும் போய் விட்டார். இடிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு முன்னால் உள்ள கட்டிடம் ஒன்றில் பொதுத் தேர்தலின் போது பௌசி, ஆசாத்சாலி போன்ற அர்சியல் வாதிகளின் கட்டவுட்டுகள் கட்டப்பட்டிருந்தன. அந்த கட்டவுட்டுக்களில் உள்ள அந்த அரசியல் வாதிகளின் படத்தைப் பார்த்து மக்கள் பெருமூச்சு விட்டவாறு சென்றனர். 22 குடியிருப்புக்களை அரசாங்கம் அகற்ற விருமபினால் அதற்கான நெறி முறைகளை கடைப்பிடித்திருக்கலாம். ஜனநாயக ரீதியான செயற்பாடுகளை செயற்படுத்தியிருக்கலாம். இவை யாவும் புறக்கணிக்கப்பட்டு, இந்த ஏழை மக்கள் நிற்கதி ஆக்கப்பட்டுள்ளனர்.

முன்பு கொம்பனித் தெரு புகையிரத வீதிப் பக்கமாக உள்ள குடியிருப்புக்களைபுகையிரத இலாகா அகற்ற முற்பட்டபோது கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ண அவ்விடத்திற்குச் சென்று அதிகாரிகளுடன் வாதிட்டு அந்த முயற்சியை தடுத்து நிறுத்தியிருந்தார். அதே பகுதிக்கு பின்னர் புகையிர இலாகாப் பகுதியினர் மீண்டும் வந்த போது மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலையீட்டை கோரியிந்தனர். ரணில் விக்கிரமசிங்காவும், மனோ கணேசனும் புகையிரதங்களை அவ்விடத்தால் போகவிடாது மறியல் செய்தனர். அம்முயற்சி அன்று கைவிடப்பட்டு பின்னர் வெற்றீகரமாக குடியிருப்புகள் இடிந்து தள்ளப்பட்டது. மியூஸ் வீதித் தகர்ப்பின் போது மக்கள் பல அரசியல் வாதிகளின் தலையீட்டை கோரியிருந்தனர். அதற்கான எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பிக்க எவரும் முன்வரவில்லை.

இடதுசாரி விடுதலை முன்னணிக்கு மக்கள் பிரதிநிகள் இல்லை என்பதால் எமது தலையீட்டுக்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை பொதுவாக இப் பகுதி மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தமது ஆமோக ஆதரவை வழங்கி வருவது வழமையாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இங்கே ஓரளவான ஆதரவு உண்டு. முஸ்லீம் காங்கிரசுக்கும் ஆதரவு உள்ளது. ..... இருந்தும் இடிந்து தள்ளும் போது எவரும் அங்கே பிரசன்னமாய் இருக்கவில்லை.

1998ல் நடைபெற்ற கொழும்பு மாநகர சபை தேர்தலின் போது கலாநீதி விக்ரமபாகு கருணாரட்னா நகரப் பகுதியில் ஏழை மக்களை விரட்டுவதற்கான திட்டத்தைப் பற்றி, தனது பிரச்சாரத்தின்போது எச்சரித்து இருந்தார். அவரின் கருத்தை எவரும் கேட்கவும் இல்லை அவரை ஆதரிக்கவும் இல்லை.


இன்று ஏழைகளுக்கு எதிராக பாரிய ஒடுக்கு முறை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதற்கு எதிராக ஒரு இடதுசாரி தளத்தைக் கொண்ட போராட்ட ஒழுங்கு முறையே பலனைக் கொடுக்கும். அதைத்தவிர்த்து தொடர்ந்தும், யானையின் பின்னும் வெற்றிநிலையின் பின்னும் செல்வோர்கள் ஆனால் பலகுடியிருப்புக்கள் இல்லாமல் போகும்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் வீடுதலை போராட்டம் இரும்பு கரம் கொண்டு அடக்கப்பட்டது இந்த அடக்கப்பட்ட விடயம் விழாவாக கொண்டாட அரசாங்கம் முயன்றபோது பெருமழை அதனை தடுத்துவிட்டது.

ஜே.வி.பியினர் இந்த விழாவை எதிர்த்தனர் ஏனென்றால் விழாவின் நாயகன் சரத்பொன்சேகா சிறையில் இருப்பதால் இதை கொண்டாட கூடாது என்பதே அவர்களின் ஆதங்கமாகும். சரத்பொன்சேகா சிறையில் இல்லாமல் இருந்து இருந்ததால் ஜே.வி.பியினர் சரத்பொன்சேகா தலைமையில் வாணவேடிக்கையுடன் யுத்த வெற்றியை கொண்டாடியிருப்பார். யுத்த வெற்றி விழா என்பது ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி மற்றும் ஜே.வி.பி ஆகியோர் இணைந்து பெற்று எடுத்த குழந்தை என்றே கூறவேண்டும்.

1948ல் இந்த நாடு ஆங்கிலேயரிடம் இருந்து மாயையான சுகந்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு தமிழர்களின் ஒரு பகுதியினர் தமது பங்களிப்பை வழங்கி இருந்தனர் இங்ஙனம் தமிழர்கள் கலந்து கொண்ட போது தமக்கு தனி அரசோ, சமஸ்ட்டியோ வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடம் இருக்கவில்லை.

ஆனால் இன்று பிரிவினைக்கு தமிழ் மக்கள் செல்வதற்கு உரிய அனைத்து




செயற்பாடுகளையும் சிங்கள பௌத்த பேரினவாதமே உருவாகியிருந்தது.

இந்த நிலைமைகள் 2010ம் ஆண்டு வரை நீட்டித்தது இன்று அது நந்திக்கடல் அல்லது முள்ளிவாய்க்கால் பகுதிகளில் புதையுண்டு இருக்கும் துப்பாக்கிகளில், வரலாறாக பதியப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கிகள் மீட்கப்படும் போது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதி வரலாற்றை புரிந்து கொள்ளமுடியும். இந்த வரலாற்றை கூறுபவர்கள் இறுதியுத்தத்தில் மேற்படி பகுதியில் துப்பாக்கிகளை கையில் ஏந்திய வண்ணம் வீர மரணத்தை தழுவிய போராளிகளின் தாய் தந்தையர்களே.

தற்போது ஏற்பட்டு இருக்கும் வெள்ள அனர்த்தம் தணிந்த பின்னர், அரசாங்கம் யுத்த வெற்றியின் ஓராண்டு நிறைவை கொண்டாடலாம். ஆனால் ஜே.வி.பிக்கு இந்த வெற்றியை கொண்டாட குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் குழப்பத்திற்கு ஜென்ரல் பொன்சேகா சிறையில் இருப்பது மட்டும் காரணம் அல்ல முக்கிய காரணம் இந்தியா இந்த வெற்றியின் பின்னால் இருப்பதும், தற்போது இந்தியாவின் நிழல் இலங்கையை மறைக்க தொடங்கியிருப்பதுமே ஆகும்.

இந்தியா முழு ஆக்கிரமிப்பை நடத்த கூடிய விதத்தில் 2000 மேற்பட்ட ஏக்கர் நிலத்தை கொள்வனவு செய்திருப்பதாக ஜே.வி.பி பத்திரிகையான "லங்கா" செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இலங்கை இராணுவத்தை சேர்ந்த சிப்பாய் ஒருவர் இந்திய கட்டுப்பாட்டில் உள்ள சாம்பூர் பகுதியில் திடீர் மரணத்துக்கு உள்ளாகி உள்ளார். இந்த சிப்பாயை ஜே.வி.பியினர் தேசிய வீரர் என்றே கொள்வார்கள். எனவே தேசிய வீரர் ஒருவரின் திடீர் மரணத்துக்குரிய விசாரணையை மேற்கொள்ளவதற்கு அப்பகுதிக்கு சென்ற நீதிபதியை இந்திய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இதனால் சிக்கல் எழுந்தது. எனவே இந்த பூமியை மீட்டவர்கள் தாமே என்ற இறுமாப்பில் இருந்த ஜே.வி.பிக்கு இது அதிர்ச்சியை வழங்கியது. பின்னர் நீதி அமைச்சரின் முயற்சியின் காரணமாக நீதிபதி அப்பகுதிக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இதன் மூலம் நீதிமன்ற அதிகாரத்தைவிட அமைச்சர் ஒருவருக்கு அதிக அதிக அதிகாரம் இருப்பது தெரிய வருகிறது.

சாம்பூர் பகுதியில் 1200 குடும்பங்களின் விவசாய நிலங்கள் இந்திய கம்பனிக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளது. இந்தநிலங்களை இழந்தவர்களுக்கு இன்றுவரை எத்தகைய நஷ்டஈடும் இதுவரை வழங்கப்படவில்லை. இந்த செய்தியும் ஜே.வி.பி பத்திரிகை பிரசுரித்துள்ளது.

மேற்படி 1200 விவசாய குடும்பங்களும் ஜே.வி.பியின் யுத்த வெறியின் காரணமாகவே வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது என்று ஜே.வி.பிக்கு இன்றுவரை புரியாமலேயே உள்ளது.

இந்த நிலம் இந்த பூமியை காப்பாற்ற ஆயுதம் ஏந்தி போராடிய போராளிகளினது தாய்தந்தையரின் நிலமாகும்.

யுத்தத்தை காரணம் காட்டி மக்களை வெளியேற்றி அதன்பின்பு அந்த

.........6 பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதத்தை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லப் போவதில்லையென அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றி உரையொன்றில் குறிப்பிட்டிருந்தார். பிரதானமாக இந்தியா, பாகிஸ்தான், சீனா மற்றும் எத்தனையோ நாடுகளிடமிருந்தும் தாராளமாகப் பெற்றுக் கொண்ட இராணுவ ரீதியிலும் வேறு வகைகளிலுமான உதவிகளுடனேயே சென்ற வருடம் மே மாதத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம், தோற்கடிக்கப்பட்டதன் பின்புலத்திலேயே ஜனாதிபதி ராஜபக்ஷ தனது மேற்குறித்த திட சங்கற்பத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

# இலங்கையில் உண்மையான சமாதானத்தையும் சுபீட்சத்தையும் எவ்வாறு எட்ட முடியும்?



வ. திருநாவுக்கரசு

அரசியல் கண்ணோட்ட மற்ற அறிக்கைகளின் பயனேது?

மற்றும், விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட தோடு நாட்டுக்குச் சமாதானம் கொண்டு வரப்படடுள்ள தெனவும் தேசிய மற்றும் சா்வதேச ரீதியில் பிரசாரம் செய்யபட்டு வருவதையும் காணலாம். அதே நேரத்தில் நாட்டில் புலிப் பயங்கரவாதம் அதனை ஒழித்துக் கட்ட வேண்டிய அவசியம் உண்டு என அரச தரப்பிலிருந்து அல்லும் பகலும் அலட்டிக் கொள்ளப்பட்டு வருவதைக் காணலாம். வெளிநாடுகளில் இயங்கிவருவதாகக் கூறப்படும். தமிழ் பிரிவினைக் குழுக்கள்" தொடர்பாக எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென அண்மையில் பாதுகாப்புச் செயலாளா். கோத்தபாய ராஜபக்ஷ அறிக்கை விடுத்திருந்தார். அதாவது "அரசாங்கம் ஒவ்வொரு அங்குல நிலத்தையும் மீளக்கைப்பற்றிதோடு சமாதானத்தையும் மீட்டுள்ளதாயினும் தேசிய மற்றும் சா்வதேச ரீதியில் தொடா்புபட:டள்ளதாகிய 30 வருட நெடுங்காலப்பிரச்சினை ஒன்றையே கடந்து வருகின்றோம். என்பதை நாம் மறந்து விட முடியாது. நாடு கடந்த அரசாங்கம் (ீவுபுவுநு). உலகளாவிய தமிழ் மன்றம் (புவுகு) மற்றும் பல தமிழ் அமைப்புக்கள் ஜனநாயக ரீதியில் இயங்கிவருகின்றன என்று காரணம் கற்பிக்கப்பட்டாலும் அவையாவும் முன்னாள் விடுதலைப்புலிகள் தரப்பினாலேயே வழிநடத்தப்பட்டுவருகின்றன" என்றே கோத்தபாய கூறியுள்ளார். எனவே தான் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை இராணுவரீதியான கட்டம் முற்றுப் பெற்று விட்டதாயினும் வேறானதொரு அடுத்த கட்டம் வேறானதொரு கோணத்தில் தொடப்பட்டுக் கொண்டிருந்தாகவும், இயல்பு நிலையை மீட்டு சமாதானத்தின் முழுமையான பலாபலன்களையும் மக்களுக்க அளிப்பதற்கான பற்றுறுதியினை அரசாங்கம் கொண்டிருந்த போதும், நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்க் கூடாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்புடையினர். பொலிஸ் தரப்பினர் மற்றும் புலனாய்வுத் துறையினர் மூலம் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்வுள்ளன என்றெல்லாம் கோத்தபாய குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இது ஒரு அரசியல் நோக்கு அற்றதும் அரசியல் தீர்வுதான் பயங்கரவாதத்திற்கு விடைகொடுக்க வல்லது என்னும் கண்ணோட்டம் அற்றதுமான போக்கு என்பதைச் சொல்லத் தேவையில்ல.

யுத்தம் முடிவுற்றதும் சமாதானம் மலா்ந்து விட்டதென்பது வேடிக்கையானது

மேலும், யுத்தம் முடிவுற்ற கையோடு சமாதானம் வந்து விட்டதென அரசாங்க முக்கியஸ்தா்கள் மட்டுமல்லாமல் பல சிங்கள புத்தி ஜீவிகள் மற்றும் அநேகமான சிங்கள ஆங்கில் ஊடகத்துறையினரும் பறைசாற்றி வருவதைக் காணலாம். இது தான் மிக மிக வேடிக்கையானதும், கவலைக்குரியதும் ஆகும். அதாவது அடிப்படைப்பிரச்சனையாகிய தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு அா்த்தமுள்ளதும் ஏற்புடையதுமான அரசியல் தீா்வுதான் உண்மையான சமாதானத்திற்கான திறவுகோல் என்பதை இவா்கள் புரிந்து கொள்ள வில்லை. என்பதை விட புரிந்து கொள்ள மறுத்து வருகிறாா்கள். என்று ஆணித்தரமாகக் கூறலாம். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தோற்றுவித்ததற்குக் காரணமாயிருந்ததும் தொடா்ச்சியாகக் கையாளப்பட்டு வந்ததுமாகிய அரச பயங்கவாதம் தொடா்பாக இவா்கள் வாய் திறக்கவில்லை. சிங்கள பேரினவாதமும் அரச பயங்கரவாதத்தின் மறுவடிவம் என்பதை யாரும் மறுதலித்து விட முடியாது.

நாடு கடந்த அரசாங்கம் என்ற பிரச்சனையை இலங்கை அரசாங்கம் மிகைப்படுத்துகிறது. நிற்க வெளிநாடுகளிலுள்ள விடுதலைப்புலி உறுப்பினா்களின் வழிகாட்டலில் நாடு கடந்த தழிழீழ அரசாங்கம் (ீவுபுவுநு) அமைப்பது தொடா்பாகப் பாதுகாப்புச் செயலாளா் கூறும்போது அது மிகவும் பாரதூரமான விடயம் என்பதால் அதற்கெதிராக அடுத்த கட்டயுத்தம் நடத்தப்பட் வேண்டுமெனச் கூறியுள்ளதைப் பாா்போமாயின் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீா்வு காண்பதற்குக் கிஞ்சித்தும் அக்கறைகொண்டிருக்கவில்லை. என்பது நன்கு புலனாகின்றது. அதனை மூடி மறைப்பதற்கு ஏமாற்று வித்தை கற்பித்து காலம் கடத்தும் நோக்கிலேயே அரசாங்கம் காய்கறி நகா்த்தி வருகின்றது. அரசாங்கம் கற்பனை செய்து போன்ற அச்சுறுத்தல் இருந்தாலும் கூட இலங்கையில் தமிழ் பேசும் மக்களைத் தொடா்ச்சியாக ஒடுக்கும் வீண் செயலைக் கைவிட்டு, ஐக்கிய இலங்கைக்குள் அவா்கட்டு உரித்தான அதிகாரப் பகிா்வுடன் கூடிய அரசியல் தீா்வு காணப்பட்டால் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் (ீவபுவுநு) என்னும் பிரச்சனையை மிகைப்படுத்திக்காட்ட வேண்டிய தேவை உண்மென்பதற்கில்லை. அது தானாக மறைந்து விடும்.

இது தொடா்பாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சா் பேராசியா் ஜி.எல்.பீரிஸ் அண்மையில் "டெயிலி மிரா்" ஆங்கில இதழுக்கு வழங்கிய செவ்வியில் கூறிவைத்ததைப் பாா்ப்போம். அதாவது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அமைப்பதில் வெளிநாடுகளிலுள்ள விடுதலைப்புலிகள் உறுப்பினா்கள் ஈடுபட்டுக் கொண்டிருப்பது நிஜமாயினும் அரசாங்கம் அதனை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை என அமைச்சா் பீரிஸ் குறிப்பிட்டுள்ளாா். எவ்வாறாயினுத் இலங்கையில் விசம் போல் உயந்து செல்லும் வாழ்க்கைச் செலவு போன்ற பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் அல்லலுறும் பெருவாரியான குறிப்பாக ஏழை எளிய சிங்கள மக்களைத் திசை திருப்பிக் கொண்டிருக்கும் நடவடிக்கை சூழ்ச்சியான பிரசாரத்தினை முடுக்கி விட்டுள்ளனா் எனலாம்.

வெளிநாட்டுத் தூதுவா்கள் மத்தியில் ஜனாதிபதி பிரசங்கம்

அண்மையில் குறிப்பாக இது விடயமாக வெளிநாட்டுத் தூதுவா்களை ஜனாதிபதி ராஜபக்ஷ அழைத்து உரையாற்றினாா் 09.11 தாக்குதலைத் தொடா்ந்து அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோா்ஜ் டபிள்யூ புஷ் முடுக்கி விட்டதாகிய "பயங்கரவாதத்தை துடைக்கும் யுத்தம்" (War on Terror) என்னும் நிலைப்பாட்டினை அடியொற்றியதாகவே இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக் கெதிரான யுத்தம் நடத்தப்படுவதாக ஜனாதிபதி ராஜபக்ஷ ஏலவே கூறிவைத்ததையாரும் அறிவா். இன்று இலங்கையில் விடுதலைப்புலிகள் இராணுவரீதியாக அழிக்கப்பட்டுள்ளராயினும், சா்வதேச ரீதியிலும் அவா்கள் தலைதூக்குவதற்குக் காரணம் தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்கு எதுவித அரசியல் தீா்வையும் காண்பதற்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மனதார விரும்பவில்லை என்பதை உலகம் நன்கு அறிந்து வைத்திருந்திருக்கிறது. சென்ற ஏப்ரல் மாதம் இலங்கை பாராளுமன்றத் தோ்தல் நடை பெற்ற பின்ன் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தவராகிய போ்க் ஜேசன் (Burke Ja son) அனுப்பிவைத்த முதலாவது அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது கவனத்துக்குரியதாகும்.

"சிங்கள பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவராகிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கைத் தழிழருக்கு சுயாட்சி அதிகாரம் வழங்குவதற்கான அரசியல் நடவடிக்கை மேற்கொள்வதற்கு விருப்பமற்றவா் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல என்பதை அவா் பிரதிபலித்து வந்துள்ளாா்"

ஆம் சிங்கள பௌத்த பெரும்பான்மை மேலாதிக்கத்தினை. உரமூட்டிப்பேணுவதற்காக, ஒற்றையாட்சி முறைமையில் மாற்றம் எதுவும் இல்லை என்பதே ஜனாதிபதியின் எதேச்சாதிகாரமானதும் ஏற்றுக் கொள்ள முடியாததுமான நிலைப்பாடாயுள்ளது. அதாவது இலங்கை ஒரு பல்லின மற்றும் பன்முகத்தன்மையான நாடு என்பதை அவா் அப்பட்டமாக நிராகரிக்கும் போக்கில் நடந்து கொள்வதை சா்வதேச சமூகம் கண்டு கொள்ளாமலிருக்க முடியாது. அண்மையில் தெஹ்ரானில் நடைபெற்ற ஜீ.15 (G. 15) நாடுகள் மாநாட்டில் பங்குபற்றியதோடு அதன் தலைமைப்பதவியையும் சுழற்சிமுறையில் பெற்றுக் கொண்டு ஜனாதிபதி ராஜபக்ஷ ஆற்றிய உரையில் உள்ளடக்கியிருந்த 2 பிரதான அம்சங்களை மேற்கோள் காட்டுவது பொருத்தமாயிருக்கும் அவையாவன.

(அ) "சா்வதேச நிதி கட்டமைப்பில் சீா்திருத்தங்கள் செய்யவேண்டுமென்பதை ஜீ-15 வலியுறுத்துகிறது அவ்வாறாகவே வினைத்திறனுடன் கண்காணித்து நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியைத் தவிா்த்துக் கொள்ள முடியும் சம்பந்தப்பட்டவா்களை உள்வாங்கி வெளிப்படைத்தன்மையாகக் கலந்துரையாடுவது அவசியமாகும்."

(ஆ) ஜீ - 15 குழுவானது எப்போதுமே வெளிப்படுத்தி வந்த பலம் வாய்ந்த ஒற்றுமை மற்றும் அதன் செழிப்பான பன்முகத்தன்மை அதன் குறிக்கோள்களை அடைவதற்கும் பெரிதும் வழிசமைக்கும். G15 குழுவின் மைல்க்கல் ஆகிய 20வது ஆண்டு நிறைவு நினைவு கூறப்படும் இவ்வேளையில் அதன் தலைமைப்பதவி ஏற்றுக் ஒரு தனிச்சிறப்பெனவும் இலங்கைக்கு அளிக்கும் கௌரவம் எனவும் நான் கருதுகிறேன்"

அங்கே தெஹ்ரானில் சம்பந்தப்பட்ட எல்லோரையும் உள்வாங்க வேண்டும் என்றும் ஒற்றுமை மற்றும் அதனோடிணைந்த செழுமை நிறைந்த பன்முகத்தன்மை அவசியமானவை என்றும் ஜனாதிபதி ராஜபக்ஷ உரத்துக்கூற முடியுமாயின் இலங்கையில் அதற்கு எதிா்மறையான திசைவழியில் ஏன் அவா் பயணித்து கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. அதாவது உலகிற்கு உபதேசம் செய்யும்போது அதேவேளை உள்நாட்டில் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீா்வுக்காணும் அணுகுமுறையில் ஏன் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்? உலகிலேயே மிகக் கொடூரமான பயங்கரவாத இயக்கமென வா்ணித்த விடுதலைப்புலிகளை தோற்கடித்து பயங்கரவாதத்தை இலங்கையில் கூண்டோடு அழித்துவிட்டதாக மாா்தட்டும் ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமை தாங்கும் ஸ்ரீலங்கா சுகந்திர கட்சியானது விடுதலைப்புகள் அன்று தோற்றம் பெற்றதற்கு காரணம் அதற்கு முந்திய 2 தசாப்தத்திற்கு மேலாக செய்த பங்களிப்பு என்பதைக் கிஞ்சித்துப் அசைபோடுவதாக இல்லை. மாறாக வெறுமனே வாய்ச்சவாடல் மலிந்து காணப்படுகிறது

ஆட்சிபீடத்தின் பல உயா் பதவிகளில் ஜனாதிபதியின் சொந்தக்காராா்கள் குறிப்பிட்டிருக்கின்றாா்கள் தானே என அண்மையில் அல் ஜசீரா தொலைக்காட்சி நிருபா் பொசியா இப்றாஹிம் எழுப்பி கேள்விக்கு, நாட்டு மக்கள் எல்லோரும் தனது சொந்தக்காரா் என்று ஜனாதிபதி கூறியது மிக வினோதமாய் உள்ளது . அது ஒருபுறமிருக்க 1956 இல் அதே ஸ்ரீலசுக இட்ட சிங்களம் மட்டும் தீயே தமிழரை அந்நியப்படுத்துவதங்கும் தனி நாட்டு கோரிக்கைக்கும் வித்திட்டது என்பதையும், 2 தசாப்த காலத்தின் பின்புதான் தமிழா் தரப்பில் தமிழ் தனிநாட்டு கோரிக்கையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும்இலங்கை அரசியல் வானில் தோன்றின என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு புரிந்து கொள்ள முடியாதது என்பதல்ல. உண்மையில் அவா் அரசியல் மன உறுதியோடு சிங்கள கடும் போக்காளகட்கு வரைந்து கொடுக்காமல் தமிழ்பேசும் மக்களை உள்வாங்கி அா்த்தமுள்ள அரசியல் தீா்வு காண்பதற்கு துணிச்சலுடன் பயணிக்க வேணடுவதே அவரின் கடப்பாடாகும். அவ்வாறாகவே நாட்டை உண்மையான வளா்ச்சிப்பாதையில் இட்டுச்செல்வதுடன் சமாதானம் மற்றும் சுபிட்சத்தையும் எட்டமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசிய கட்சி

## சந்தைப் பொருளாதாரத்தின் மீதுள்ள விசுவாசத்தை கைவிட முடியாது.

### கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன

இன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கடுமையான விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. அண்மைய பாராளுமன்ற தேர்தலின் பின்னர் இந்நிலை விஸ்வரூபம் எடுத்து வாய்த்தர்க்கங்கள் இடம் பெறும் நிலைக்கு சென்றுள்ளது. கட்சியின் தொடர்ச்சியான வீழ்ச்சி நிலைக்குரிய காரணத்தையே எல்லோரும் அறிய விளைகின்றனர். பெருமபாலானவர்கள் கட்சியின் அமைப்பு முறையில் உள்ள பலவீனநிலையின் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்றபட்டதென்றும், எனவே கட்சியை மறுசீரமைப்பதுடன், தலைமையிலும் மாற்றம் வேண்டும் என வற்புறுத்துகின்றனர்.

ஆனால் இங்கே எவரும் கட்சியின் வேலைத்திட்டம் தொடர்பாகவோ கட்சியின் கொள்கை தொடர்பாகவோ கேள்வி எழுப்பவில்லை. உண்மையில் அமைப்புரீதியான பிரச்சினைதான் பின்னடைவுக்கு காரணம் என்றால் அமைப்பு ரீதியாக இக் க்ட்சியால் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் ஏன் நல்ல விளைவுகளை வழங்கவில்லை. உதாரணமாக கருஜெயசூரியா போன்றவர்களுக்கு பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டு புதிய வடிவில் கட்சியை முன்னெடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஏன் வெற்றியளிக்கவில்லை. மேலும் கருஜெயசூரியா ரணில் விக்ரமசிங்காவை விட எத்தனையோ வழிகளில் அமைப்பு ரீதியான திறமையை கொண்டவர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததாகும்.

கருஜெயசூரியா கட்சியை மேல் கொண்டு வர கடுமையாக செயற்பட்டார். கீழ்மட்ட நிலையில் உள்ளவர்களை உள்வாங்கும் திறமையில் ரணில்விக்கிரமசிங்காவின் பலவீன நிலையை கருத்தில் கொண்டு கருஜெயசூரியா, அந்த நிலையை மேம்படுத்த கடுமையாக செயற்பட்டார்.

மகிந்த ராஜபக்சவை விட, கருஜெயசூரியா திறமையான செயற்பாட்டு வலிமையுடையவர் என்றே கருதப்படுகிறது. ஆனால் இவை எவையும் கட்சியை வீழ்ச்சி நிலையில் இருந்து மேல் கொண்டு வர உதவவில்லை எனவே ஆட்களை குறைகூறுவதை விடுத்து கட்சியின் கொள்கையை முதலில் பரிசீலிக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

பழமைவாத சொத்துரிமையாளர்

ஐக்கிய தேசியக் கட்சி 1947ல் தோற்றம் பெற்றது, இக்கட்சியை உருவாக்கியவர்கள் பழமைவாத சொத்துரிமையாளர்களே. இக் கட்சியில் முதலாளித்துவ பிரிவினர் ஆதிக்கத்தை பெற்றதோடு, இவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளோடும் அவர்களின் கலாச்சாரத்தோடும் இணங்கிச் செல்லும் போக்கை உடையவர்களாகவும் இருந்தனர். டி.எஸ் சேனநாயக்கா இத்தகைய சூழ்நிலைக்குரிய தலைவராக விளங்கினார். இவர் மேற்கத்திய பண்பாட்டின் அடிப்படையிலான தேசியத்தை கட்டியெழுப்ப முயன்றார். மேலும் இவர் வசதி படைத்த தமிழ், முஸ்லிம் தலைமைகளையும் உள்வாங்கி இருந்தார்.

இங்கே சிங்கள தேசிய வாதம் என்ன தேவைக்கு முதலில் வளர்ந்து எடுக்கப்பட்டது. என்பதை பார்த்தால் பாட்டாளி மக்களின் பலத்துடன் இக்காலப் பகுதியில் அதிக பலம் பொருந்திய அமைப்பாக விளங்கிய சமசமாஜவாதிகளின் செல்வாக்கை வீழ்த்தவே சிங்கள் தேசிய வாதம் முன்னெடுக்கப்பட்டது. இனவாதம் இங்கே முதலாளித்துவ அரசை நிலைநிறுத்த் நுட்பமாக கையாளப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதன் உண்மையான நோக்கம் அவர்கள் தமிழர்கள் என்ற காரணத்துக்காக அல்ல. இவர்கள் ஓரம் கட்டப்பட்டதற்கு முக்கிய காரணம் இவர்கள் சமசமாஜக் கட்சி கட்சியின் பின்னால் அணி திரண்டதாகும் இதன் மூலம் சமசமாஜக்கட்சி இடதுசாரி அரசை நிறுவிவிடும் என்ற பயயே இங்கு முக்கிய விடயமாகும்.

இதே நேரம் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா மூன்றாவது சக்தியாக தோற்றம் பெற்று தாராளவாத முதலாளித்துவ பிரிவாக தன்னை அடையாளம் காட்டினர். இவருடைய வருகை ஐக்கிய தேசியக் கட்சிக்கும், இடதுசாரிகளுக்கும் பின்னடைவைக் கொடுத்தது. இக்காலத்தில் ஏற்பட்ட முதலாளித்துவ வளர்ச்சி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்கு உதவியது. எனவே சில சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும் சமூகநல நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் வாய்ப்பை வழங்கியது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் வாத எழுச்சி உலகின் ஏனைய பகுதிகளிலும் சமகாலத்தில் நடந்தேறியது. இக்காலப்பகுதியில் நேரு, நிக்றுமா, சுகர்னோ, போன்றவர்கள் தத்தமது நாடுகளில் எழுச்சி கொண்ட மக்கள் தலைவராக விளங்கினர். பல தசாப்த காலத்துக்கு இவர்கள் செல்வாக்கு பெற்று இருந்தனர். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இவர்களின் கொள்கைகள் முன் மாதிரியான இருந்ததுடன் வறுமையில் வாடும் மக்களுக்கு விடிவை வழங்கும் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. ஆனால் உலகபொருளாதார பிரச்சனை இத்தகைய நம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஐக்கிய தேசியக் கட்சி இந்த சந்தாப்பத்தை தனக்கு சாதகமாக்கி தாராளவாத சந்தை பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தியது. 1977ல் பதவிக்குவந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவே ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை முன்னொடுத்து வெற்றி கண்ட இறுதித்தலைவராவார்.

அழிவில் இருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி சோசலிச முகத்துடன் இருந்த தமது கொள்கைகளை கைவிட்டு சந்தை பொருளாதார முறைமையை முன்னெடுத்தது. இதற்கு மனிதாபிமானமான முகம் கொடுக்கப்பட்டது. உண்மைநிலை இதுவாகும்.

மகிந்த அரசாங்கம் ஜே.ஆரின் அரசாங்கத்தை போன்றதே ஆனால் இவர்கள் ஏழைகளின் நண்பர்கள் எனதம்மை அடையாளப்படுத்திக் கொண்டு சந்தைப் பொருளாதார முறைமையை முன் எடுக்கின்றனர். இன்று மகிந்த அரசாங்கம்

7 பக்கத்தில்.......

அண்மையில் ஜேர்மனியில் பேர்லின் சுவர் தாக்கப்பட்டமைக்கான 20வது நிறைவுவிழா கொண்டாடப்பட்டது. இவ் வைபவத்தை சுயமுயற்சிக்கான வெற்றியாக முதலாளித்துவ ஆதரவாளர்கள் பாராட்டு தெரிவித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். சுதந்திரமான புதியயுகத்தின் ஆரம்பம் என்றும் எதிர்வு கூறினார்.

ஆனால் இவர்கள் ஒன்றை மறந்து விட்டனர், ஜேர்மனிய பேர்லின் சுவர் வீழ்ந்த பின்னர் இந்த 20ம் வருட காலப் பகுதியில் பல சுவர்கள் உலகில் தோன்றியுள்ளன என்பதையும் முக்கியமாக பலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு சுவரை பலமாக கட்டி வருவதையும் 1948 ன் பின்னர் பாலஸ்தீனத்தின் நிலப்பகுதியில் 78% விகிதத்ததை இஸ்ரேல் கபனீசரம் செய்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

1993 ஒஸ்லோ உடன்படிக்கையின் அடிப்படையில் 22மூ விகித நிலப்பகுதியல் ஒரு அரசை உருவாக்க முடியும் என பாலஸ்தீனம் நம்பியது. ஆனால் இஸ்ரேல் தான் கட்டிய சுவரை மேலும் பாலஸ்தீனப் பகுதிக்குள் கொண்டு சென்று மீண்டும் பலஸ்தீன மண்ணை அபகரித்துள்ளது.




இங்கனம் அமைக்கப்பட்ட சுவரின் மூலம் பாலஸ்தீன விவசாயிகளின் நிலங்களும் பல நகரங்களும் இஸ்ரேலுக்குள் சென்றுள்ளன.

அடுத்த சுவராக...

அமெரிக்க மெக்சிக்கோ எல்லையில் அமெரிக்க நிர்வாகம் ஒரு தடுப்பு சுவரை எழுப்பியுள்ளது. இதன் பின்னர் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து வறுமையின் நிமித்தமும் அப்பகுதிகளில் உள்ள அரச ஒடுக்கு முறைக்கு தப்பியும் வெளியேறும் மக்கள் வெளியேற முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நாடுகளில் வறுமை ஏற்படுவதற்கு அமெரிக்காவின் செயற்பாடுகளே காரணமாக உள்ளது. மேலும் இங்கே ஆட்சியில் இருக்கும் அடக்கு முறை அரசுகளுக்கு அமெரிக்காவே ஆதரவை வழங்கி வருகின்றது.

ஐக்கிய அமெரிக்காவுக்குள் லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்து சட்டரீதியற்ற முறையில் நுழைவதற்கு முயன்று மரணித்தவர்களின் தொகை, கிழக்கு ஜேர்மனியில் இருந்து, மேற்கு ஜேர்மனிக்குள் சட்ட விரோதமாக பிரவேசிக்க முயன்று மரணத்தை தழுவியவர்களை விட அதிகம் என்றே அறியப்படுகிறது. தற்போது அவுஸ்திரேலியா சுயமாக எழுப்பியிருக்கம், தடைகள், தடைமுகாம்கள் ஆகியவற்றால் ஆயிரக்கணக்கான அகதிகள் சிறைகளில் வாடும் நிலமை உருவாகி உள்ளது. இத்தகைய தடுப்புமுகாம் தற்போது இந்தோனேசியாவுக்கு அருகே உள்ள கிறிஸ்மஸ்தீவில் உருவாக்கப்பட்டுள்ளது. இது அவுஸ்ரேலியாவின் பிரதான நிலப்பகுதியில் இருந்து வேறு இடத்தில் உள்ளது. எனவே ஈராக்கில் ஆப்கானிஸ்தானில், இலங்கையில் இருந்து அகதிகளாக செல்வோருக்கு இந்த யுகம் சுதந்திரத்துக்கான புதிய யுகம் என ஒரு போதும் கூறமுடியாது.

பேர்லின் சுவர் தகர்த்தமைக்கான பிரதான காரணம், கிழக்கு ஜேர்மனியில் ஸ்டாலினிச ஆட்சியாளருக்கு எதிராக கிளம்பிய படிப்படியான எதிர்ப்பு அலைகளே காரணமாக அமைந்தது. 1989 காலப்பகுதியில், கிழக்கு ஐரோப்பா எங்கும் எதிர்ப்பு அலைகள் உருவாயிருந்தது. ஸ்டாலிசை ஆட்சியாளர்கள் வெளியேறும் நிலை உருவாகியது. பல தலைமைகள் மாற்றப்பட்டு ஜனநாயகத்துக்கும் சீர்திருத்தத்திற்கும் ஆதரவாளர்களாக தம்மை பிரகடனப் படுத்தும் நிலை உருவாக்கப்பட்டது. சீர்திருத்தம் என்பது வித்தியாசமானதாக அர்த்தம் கொள்ளப்பட்டது. இது பெரும்பான்மையான கிழக்கு ஐரோப்பிய மக்களிடம் நிலவியது. சுதந்திரமான தேர்தல், பேச்சுக்கான சுதந்திரம் என்றும் அர்த்தம் கொள்ளப்பட்டது.

ஆனால் எதிர்ப்புஇயக்க தலைவர்கள், புனரமைக்கப்பட்ட காம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிகாரவர்க்கம் சீர்திருத்தம் என்பது முதலாளித்துவ பொருளாதார முறையின் மீள் உருவாக்கம் யுகம் என்றே அர்த்தம் கொண்டனர்.

அனேக சோசலிச வாதிகள் கிழக்கு ஐரோப்பிய எழுச்சியை ஜனநாயக சோசலிசத்தக்கான யுகம் என்றே நம்பினர்.

உண்மையில் முதலாளித்துவ சார்பு சக்திகளே, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், அதிகாரத்துக்கு வந்தன. இவர்கள் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கியதுடன் பெருந் தொகையான தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டியதுடன், மக்களின் சமூக நலன்களுக்கான நிதிகளையுடம் இரத்துச் செய்தனர்.

இத்தகைய செயற்பாடுகள் பாரிய பொருளாதார பின்னடைவை ஏற்படுத்தியது. இவற்றில் சில நாடுகள் மீளவும் வழமைக்கு வந்தாலும், இன்றும் அந்த நாடுகளில் வேலையில்லா திண்டாட்டங்கள் உச்சநிலையில் உள்ளது.

பல சோசலிச வாதிகள் கிழக்கு ஐரோப்பிய எழுச்சியின் மூலம் வேறுபட்ட விளைவுகள் ஏற்படும் என்றே நம்பினர். ஜனநாயக சோசலிசத்தின் தொடக்கமாக

7 பக்கத்தில்..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடைபாதை வியாபாரம்

லீனஸ் ஜெயதிலகா

இது வறியவர்களின் சந்தையாகும். வறிய உற்பத்தியாளர், வறியநுகர்வோர் சந்திக்கும் இடமாகும். இவர்களின் இந்த நடவடிக்கையை தடுப்பது அவர்களின் அடிப்பமை உரிமையை மீறும் செயலாகும்.

இன்று அரசாங்கம் நடைபாதை வியாபாரத்தை முற்றாக தடை செய்துள்ளது. இதைச் சிலர் வரவேற்றுள்ளனர். பலர் எதிர்க்கின்றனர். உழைக்கும் மக்களுக்காக செயற்பட்டு வரும் நாம் இதை எப்படி ஆதரிக்க முடியும் சில் தமிழ் பத்திரிகைகள் இந்த நடவடிக்கை தொடர்பாக அரசாங்கப் பக்கம் நியாயம் இருப்பதாக கூறுவதும், தமது ஆசிரியர் தலையங்கத்தையே அதற்கு துணையாக்கி இருப்பதும் கவலைதரும் விடயமாகும்.

உண்மையில் இந்த நடைபாதை வியாபாரிகள் தமிழ் தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டு இருப்பதைப் போன்று மாபிய குழுவை சேர்ந்தவர்களோ அல்லது பாதாள உலகத்தை சேர்ந்தவர்களோ இல்லை. சில சமயங்களில் இவர்களை இந்த கும்பல்கள் தமது நலன்களுக்காக பாவித்து இருக்கலாம் பாதாள உலகத்தவர் செல்வாக்கு பாராளுமன்றத்தில் இல்லையா? அமைச்சரவையில் இல்லையா? வசதி படைத்தவர்கள் மத்தியில் இல்லையா? அப்படி இருந்தால் சகலரையு் தொடர்பு உடையவர் என்று அழைக்கின்றோமா? ஏழைகள என்றால் என்ன நாமத்தையும் சூட்டி விடலாமா?

நடைபாதை வியாபாரம் ஏன் நெருக்கடிக்குள் சென்றது. தற்போது முதலாளித்துவம் சந்தைகளை தனது பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவர முயற்சிப்பதாகலேயே இந்நிலை தோன்றியுள்ளது. இன்று எங்கே காகில்ஸ் நவீன சந்தை உள்ளதோ எங்கே கெயிலில் நவீன சந்தை உள்ளதோ அங்கே அருகாமையில் இருக்கும் சிறு வியாபார நடவடிக்கைகளுக்கு மூடு விழா நடக்கின்றன. இன்று இந்த நிலைமை நாட்டில் உள்ள எல்லா நகரங்களுக்கும் பரவியுள்ளது. எனவே சுப்பர் மார்க்கற் என்கின்ற இந்த நவீக சந்தைகள் நாடு முழுவதும் தனது செல்வாக்கைப் செலுத்துகிறது.

நகரத்தில் வாழ்கின்ற வசதி குறைந்த மக்கள் தமது பொருட்களை நடைபாதை வியாபாரிகளிடமே பெற்று வருகின்றனர். சப்பாத்து வகைகள், துணிவகைகள் உணவுப் பொருட்கள் என சகலதும் இங்கே மலிவாக கிடைக்கிறது இது அரசாங்கத்திற்கு பாரிய வரிஇழப்பை ஏற்படுத்துகிறது. நடைபாதை வியாபரிகளிடம் மக்கள் பொருட்களை வாங்கினால் அரசாங்கத்தின் வரிவருமானம் குறைகிறது.. இவர்களின் பொருட்களை வாங்குபவர்கள் ஏழைகளும், வருமானம குறைந்தவர்களுமே வசதி படைத்தவர்கள் நவீன சந்தைகளுக்குச் சென்று விடுகின்றனர்.

முதலாளித்துவ முறையில் கூட சிறு விற்பனை முயற்சி சிறு உற்பத்தி முயற்சி பாதுகாக்கப்படுகின்றது. இன்றைய பொருளாதார நெருக்கடிகள் இம்முயற்சிகள் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டாமையினால் ஏற்பட்டத என்று வாதிக்கப்படுகின்றது.

சிறு உற்பத்தி, விற்பனை முறையினால் ஏராளமானவர்கள் வேலைவாய்ப்பை பெறுகின்றார்கள். ஆயிரக் கண்ணகானவர்கள் சுய தொழிலை பெறுகின்றார்கள். சிறு அளவில் கடன்களைப் பெற்று இம் முயற்சிகள் மேற் கொள்ளப்படுவதால் சமுதாயத்துக்கு நன்மையே கிடைக்கிறது. புறக்கோட்டைப் பகுதியில் பஸ்தின் மாவத்தையில் பெண்கள் உட்பட பலர் இந்தத் தொழில் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். அதிகாலை 3.00 மணிக்குகே இவர்கள் சந்தைக்கு வருகின்றனர். மாலை வேளைகளில் மீண்டும் இவர்களின் வியாபார முயற்சிகள் நடைபெறுகிறது. பழங்கள் மரக்கறிகள் என இவர்களின் சந்தைப் பொருட்களாக உள்ளன.

எனவே நடைபாதைத் தொழில் என்பது சிறு உற்பத்தியாளர் சிறு விற்பனையாளர் வசதி குறைந்தவர் வாங்குபவர்களாக உள்ள செயற்பாடாகும்.

எனவே இம் முயற்சியை அரசாங்கம் தடைசெய்வது ஆயிரக் கணக்கானவர்களை நடுத் தெருவில் விடும் நிலையை ஏற்படுத்தும்

இந்தியாவில் இம் முயற்சிகள் எல்லா நகரங்களிலும் உள்ளது. இவற்றோடு சம்பந்தப்பட்டவர்கள் நீண்டகாலமாக தொடர்ச்சியாக போராடியதன் விளைவாக இம்மக்களுக்குத் தற்போது சட்ட ரீதியான அந்தஸ்தககதும் கிடைத்துள்ளது இவர்களின் சந்தை அவர்களுக்கு உரியதாக ஆக்கப்பட்டுள்ளது.

எனவே எமது நாட்டின் நடைபாதை வியாபாரத்தை ஜதார்த்த பூர்வமாக அணுகவேண்டும். இல்லாது போனால் இதன் மூலமும் புரையோடிப் போய் இருக்கம் பிரச்சினைகள் போல் பிரச்சினைகள் தோன்றலாம்.

# ஏங்கெல்ஸ் பாட்டாளி வர்க்கம் கண்ட பேராசான்

ஆர். குமார்

பிரடிக் ஏங்கெல்ஸ் 1895ம் ஆண்டு லண்டனில் காலமானார். இவரது இறப்புக்கு 12 வருடங்களுக்கு முன்னர்தான் மார்க்சீயத்தின் பிரதான கர்த்தா கார்ல் மார்க்ஸ் இறந்தார். கார்ல் மார்க்ஸ் 1883ல் காலமானார்.

இன்றைய நாகரிக உலகின் பாட்டாளி வர்க்கத்திற்கு சிறந்த கல்வி மானாகவும் ஆசானாகவும் ஏங்கெல்ஸ் விளங்கினார். அன்றைய காலப்பகுதியில் கார்ல் மார்க்ஸ்சும் ஏங்கெல்ஸ்சும் இணைந்தே செயற்பட்டனர். இவர்கள் இருவரும் பொதுவான இலட்சியத்துக்காக தமது வாழ்வை அர்பணித்திருந்தனர். பிரடிக் ஏங்கெலல் பட்டாளி வர்க்கத்துக்கு என்ன செய்தார் என்பதை விளங்கிக் கொள்ளவதற்கு முன்பு கார்ல் மார்க்கிசின் செயற்பாட்டையும். அவரது போதனையையும், அக்காலத்தல் தொழிலாளர் இயக்கத்திற்காக அவர் ஆற்றிய பங்கையும் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும் .

கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகிய இருவருமே முதன் முதலாக தொழிலாளர் வர்க்கத்தின் தோற்றத்தையும், அதன் கோரிக்கைகளையும் அடையளாம் கண்டு முதலாளித்துவ உற்பத்தி முறையின் விளைவால் இவை உருவானது என்பதை வெளிப்படுத்தினர். இவர்கள் மனித சமூகத்தின் விடுதலை பெருந்தன்மை கொண்டவர்களின் தயவினால் அல்ல ஒழுங்கு அமைக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின். தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக ஏற்படும் என்றே போதித்தனர்.

கார்ல் மார்க்ஸ்சும் எங்கெல்ஸ்சும் சோசலிசம் கற்பனையானது அல்ல என்றும் அது நவீன சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியின் மூலம் அடையப்படும் பெறுமதி மிக்க இறுதி இலக்கு என்றும் தமது ஆரம்ப விளக்கத்தை அளித்திருந்தனர். எழுதப்பட்ட வரலாறுமுழுவதும் வர்க்க போராட்ட வரலாறு என்றும் இதில் வெற்றி பெற்ற வர்க்கம் சமூகத்தின் ஏனைய பிரிவுகளை அடக்கி ஆள்வதாகவும் வெளிப்படுத்கினர்.

எனவே தான் ஏங்கெல்சின் நாமமும், அவரது செயற்பாடும் இந்த நாட்டில் உள்ள ஒ்வ்வொரு உழைககும் மகனுக்கும் தெரிந்திருக்க வேண்டும்

ஏங்கெல்ஸ் 1820ம் ஆண்டு ஜேர்மனியில் பார்மன் என்ற இடத்தில் றெகினி மாகாணத்தில் பிறந்தார். 1838ம் ஆண்டு ஏங்கெல்ஸ் தனது கல்வியை பூரணாபடுத்த முடியாத நிலையில் குடும்ப சூழ் நிலை காரணமாக எழுதுநர் வேலைக்கு சென்றார். மேற்படி வேலை அவரது தொழிலாளர் வர்க்கம் தொடர்பான விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சிகளுக்கு தடையாக அமையவில்லை. அக்காலப் பகுதியில் கெகல் ஜேர்மனியில் தத்துவத்துறையில். முதன்மை பெற்றிருந்தார். ஏங்கெல்ஸ் கெகலின் கருத்துக்களுக்கு ஆட்பட்டவராக காணப்பட்டார்.

இதே நேரம் கெகல் ஜேர்மனிய அரசின் அதிகார பிரிவில் இருந்தார். இவர் பேர்லின் பல்கலைக் கழக பேராசிரியராக விளங்கினார். இக்காலப் பகுதியில் கெகல் போதனை புரட்சீகரமாக காணப்பட்டது. கெகல் மனிதத்துவத்தை, ஆதரிப்பவராக காணப்பட்டார். கெகலின் தத்துவமனானது உலகமானது தொடர்ச்சியாக மாற்றத்துக்கு உள்ளாகி, அபிவிருத்தி அடைவதாகவும், என்பதை வெளிப்படுத்தியது. ஆனால் இந்த தன்மை அரசியலில் அரசியல் கட்டமைப்பில் ஏற்படும் என்பதை இவர் ஏற்கவில்லை. இதுவே இவரின் தத்துவத்தில் ஏஙகெல்ஸசும் மார்க்ஸ்சும் கண்ட பெரிய குறைபாடாகும். அன்றைய பிறைசிய அரசும், அதன் கட்டமைப்பிலும் மாற்றங்கள் வரலாம்தானே என்ற கேள்வி எழுந்தபோது கெகல் அதை ஏற்கவில்லை. கெகலின் வாதப்படி உலகத்தின் போக்கு மாற்றத்துக்குள்ளாகிறது. அபிவிருத்தி பெறுகிறது. என்றால் அரசு மாற வேண்டும் முதலாளித்துவ மாற்றத்துக்கு உள்ளாக வேண்டும் என்றே அமையவேண்டுமஎன்றதுடன். கார்ல் மார்க்ஸ் ஏங்கெல்ஸ் பொருளாதார நிலையே கருத்தை தீர்மானிக்கும் கருத்து பொருளாதாரத்தை தீர்மானிக்காது என்றனர்.

இதன் பின்னர் கெகலும் அவரை சார்ந்தவர்களும் மார்க்ஸ், ஏங்கெல்லை பொருள்முதல் வாதிகள் என்றனர். உற்பத்தி சக்திகளின் அபிவிருத்தியின் ஊடாகவே மனித தேவைகள் நிர்ணயிக்கப் படுகின்றன. எனவே உற்பத்தி சக்திகளின் உறவின் மூலமே இவை எட்டப்படுகிறது. இதன் மூலமே சமூகவாழ்வு, சமூக இலட்சியம், கருத்துகள். சட்டங்கள் ஆட்சி முறைகள் தீர்மானிக்கப்படுகின்றன. என்பது மார்க்ஸ் ஏங்கெல்ஸ் வாதமாகும்.

இன்றைய சமுதாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் மூலம் தனியார் சொத்துடமை உருவாகி உள்ளது.. இந்த உற்பத்தி முறையினால் சிறுபான்மையினர் பெரும்பான்மையினரை ஒடுக்கும் நிலை உருவாகி உள்ளது என்பதையும் இவர்கள் நிருபித்தனர்.



ஏங்கெல்ஸ் இங்கிலாந்தில் தனது தந்தையுடள் வாழ்ந்த போது, இது 1842 காலப்பகுதியாகும் இவரது தந்தையார் ஆலை உரிமையாளர்களில் ஒருவராவார் எனவே ஏங்கெல்ஸ் கைத்தொழில் துறையில் தொழிலாளர்களின் வாழ்விடம், வறுமை போன்றவற்றை நன்கு அவதானித்தார். மேலும் இக் காலப் பகுதியில் தொழிலாளர் சம்பந்தப்ந்தமாக வெளியாகிய சகல ஆவணங்களையும் இவர் ஆய்வு செய்தார். இதன் இறுதியில் 1845ல் ஏங்கெல்ஸ் இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலை என்னும் நூலை வெளியிட்டார்.

-(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழையாகப் பிறந்து பரம ஏழையாக மடிவாய்

**கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன.**



ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் மீதான தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளன. பாட்டாளி மக்கள் மீதான தாக்குதலுக்கு அரசாங்கம் தயாராகி வருகின்ற அறிகுறையை இந்த தாக்குதல் புலப்படுத்துகின்றது.

கொழும்பு மாநகரில் உள்ள நடைபாதை வியாபாரிகள் வீதி விற்பனையாளர்கள் சிறிய அளவிலான நடமாடும் விற்பனையாளர்கள் மீதான தாக்குதல்கள், நாடுமுழுவதும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. ஒடுக்கப்பட்ட பிரிவினரின் வியாபாரத்தின் கட்டமைப்பை அழித் தொழிக்கும் செயற்பாடானது முன்னறிவித்தல் எதுவும் வழங்கப்படாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவர்களுக்கு உரிய மாற்று ஒழுங்குகள் எதுவும் செய்யப்படாமலே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நகர அபிவிருத்தி அதிகார சபையினர் பொலிசாரின் உதவியுடன் தமது இடித்தழிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். தமது வியாபார இழப்புக்களுக்கான நஸ்ட ஈட்டை வழங்குமாறு, பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்திவருகின்றனர். தமது முயற்சிகளுக்காக சட்ட ரீதியான அங்கீகாரத்தையும் அவர்கள் கோருகின்றனர்.

இந்த முறைசார வியாபார முயற்சிகள் நாடுமுழுவதும் வியாபித்துக் காணப்படுகின்றது. சமூகத்தில் உள்ள வறிய பிரிவு மக்களே இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தகைய வர்த்தக முயற்சிகளில் நூற்றுக்கணக்கில், ஆயிரக் கணக்கில் இப்பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பிரிவில் நுகர்வோரின் தொகை பல லட்சங்கள் இந்த சந்தைக்கு செல்கின்றனர். சகல தொழிலாளர்களும் ஆகும். சில வெள்ளை உடை கொண்ட உயர்ந்த பிரிவு தொழிலாளர்களும் இந்த ஏழைகளின் சந்தையை நம்பியே உள்ளனர்.

உயர்ந்த பல்பொருள் அங்காடியில் கிடைக்கும் அனேக பொருட்கள், இவர்களின் சந்தையில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் இவர்கள் வியாபார முயற்சிகளுக்கு சேதத்தையோ அல்லது போலியானவற்றை விற்பதற்கோ முயற்சிக்கவில்லை. சில சமயம் மொத்தவிற்பனை வியாபாரிகள் தமது கையிருப்பில் அதிகமான பொருட்கள் இருப்பதால் இவர்கள் மூலம் விற்பிப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொண்டு இருக்கலாம்.

தொழிலாளர்கள் மீதான தாக்குதல்கள்.

உண்மைகள் சிலருக்கு கசப்பான அமைவதுண்டு. தொழிலாளர்கள் தாம் குறைவான வேதனத்தை பெறுவதால் இந்த ஏழைகளின் சந்தையை நோக்கி வருகின்றனர்.

உண்மையில் நடைபாதை வியாபாரத்தின் மீதான ஒடுக்கு முறை முயற்சிகள் நிச்சயமாக அது தொழிலாளி வர்க்கத்தின் மீதான தாக்குதலாகவே அமைகிறது இதனால் நடைபாதை வியாபாரிகளின் மீதான அரசாங்கத்தின் ஒடுங்கு முறை முயற்சிகளுக்கு எதிராக தொழிலாளர் அமைப்புக்கள் போராட முன்வரும் நிலையில் பல அரச தரப்பு பிரமுகர்கள் கண்டிக்கும் நிலைக்கு அவர்களை சூழ்நிலை தள்ளியுள்ளது. மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா கண்டனத்தை விட்டவர்களில் ஒருவராக உள்ளார். ஆனாலும் இடம்பெயர்ந்துள்ள இந்த வியாபாரிகளை அசரசார்பு அமைப்புக்கள் பிழையாக வழிநடத்தியுள்ளன. நடைபாதை வியாபாரிகள் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு எதிராக போராட்ட நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர். தமக்கு எதிரான இந்த நடவடிக்கையை கண்டித்து அவர்கள் ஜனாதிபதியிடம் மகஜர் ஒன்றை கையளிக்க முயன்றுள்ளனர். ஆனால் அரச சார்பு உதிரிகள் சிலர் இந்த போராட்ட முயற்சிக்குள் தலையீடு செய்து, இப்போராட்டத்தை பலவீனப்படுத்த முயன்றுள்ளனர். இவர்கள் ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் இவர்களின் போராட்டம் நடைபெறாமல் தடுக்க முயன்றுள்ளனர். இந்த நடவடிக்கைகள் ஜனாதிபதிக்கு தெரியாமல் இடம் பெற்றிருக்கும் என கூறமுடியாது.

முறைசாரா வியாபார முயற்சிகள் மீதான ஒடுக்குமுறை முயற்சிகள் உலகமய முதலாளித்துவ முறைக்கும் சிறு முயற்சியாளருக்கு இடையே நடைபெறும் முரண்பாடாகும். எனவே உலகமய முதலாளித்துவம் தமக்கு சவாலாக விளங்கும் முறைசார வியாபார முயற்சிகளை அங்கீகரிக்காத நிலைமையே இங்கு உருவாகி உள்ளது.

முறைமையின் மாதிரி

எல்லா மனிதர்களும் முறைமையின் மாதிரிக்கு அமைவாக செயற்படவேண்டும் என்ற நிலை உருவாகி உள்ளது. அதற்கு அமைவாக செயற்பட முடியாதவர்கள் மனித தூசுகளாக ஒதுக்கப்படுகின்றார்கள். இவர்கள் நகரின் மத்தியில் செயற்படுவதற்கோ, அல்லது அவர்களுக்கு ஏதும் கொடுப்பனவுகள் வசதிகளை வழங்கும் நிலையும் இல்லை.

இன்று உலகமய முதலாளித்துவம் கடவுளின் வார்த்தைகள் என்று கூறப்படுவதற்கு புதிய அர்த்தை வழங்கி உள்ளது. அதாவது ஏழையாக பிறந்து ஒட்டுத்துணிஇல்லாமல் இறந்து போ என்பதே அதன் அர்த்தமாகும். இன்று உலகமய சுரண்டல் முறைக்குள் உட்படாதவர்கள் மனித தூசுக்களாக ஒடுக்கப்படுவார்கள் என்ற நிலை தோன்றியுள்ளது. இத்தகைய மக்கள் தமது நிலை மேம்பட போராடினால் அவர்களது போராட்டம் மிருகத்தன்மையாக ஒதுக்கப்படுகிறது. இதற்காக நிறைய ஆதாரங்கள் மத்திய கிழக்கு லத்தீன் அமெரிக்கா மற்றும் எமது சொந்த நாட்டில் உள்ளன. இத்தகைய நிலையில் ஒடுக்கப்பட்டவர்களை மனதில் வைத்து வடக்கு தெற்குப் பிரச்சனைகளில் அரச பயங்கரவாதத்தை நீங்கள் தொடர்புபடுத்தி பார்த்தீர்களானால், இது ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிரான பிரச்சனைகளாகவே இனம் காண்பீர். இதை நீங்கள் ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். இன்று நகரத்தில் வாழும் ஏழைகள் தமது வாழ்வை கொண்டு நடந்த சொல்லொனா துயரத்தில் உள்ளனா என்பதேஉண்மை நிலையாகும்.

---

2 பக்கத்தின் தொடர்ச்சி ........

## ஜே.வி.பியின்......

நிலங்களை பல் தேசிய கம்பனிகளுக்கு விற்று தீர்ப்பது ஆட்சியாளரின் தந்திரமாக இருந்து வருகிறது. முன்பு தென் இலங்கையில் 1970களிலும், 1989 காலப்பகுதிகளிலும் 12000, 60,000 இளைஞர் கொல்லபட்ட அனுபவத்தை ஜே.வி.பி தனது அனுபவமாக கொள்ளாது, வெறும் அரசியல் நலனுக்காக வடக்கு கிழக்கு மக்களின் உரிமை பேராட்டத்தை தனது அரசியல் நலனுக்கு ஆக உபயோகிக்கின்றது.

1950 காலப்பகுதியில் இருந்து 1970 வரை உள்ள காலப்பகுதியில் தென்பகுதியிலேயே சகலவிதமான அபிவிருத்தி முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவை போதியதாக இல்லாது இருந்திருக்கலாம் ஆனால் அபிவிருத்தி செயற்பாடுகள் யாவும் தென்பகுதியிலேயே நடைபெற்றன.

வடக்கு கிழக்கை தெற்குடன் ஒப்பிடும் போது மிகவும் பழையதான கர்ங்கேசன்துறை சீமேந்து தொழிற்சாலை பரந்தன் இரசாயன கூட்டுஸ்தாபனம் வாழைச்சேனை காகித ஆலை என்பவை தவிர வேறு எதுவும் வடக்கு கிழக்கில் ஏற்படுத்தப்படவில்லை. இன்று வரை அரசியல் அதிகாரம் தென் இலங்கை வாக்குகளின் பலத்துடனேயே மேற்கொள்ளப்படுகிறது. சிங்கள மொழி அரசாங்க மொழியாகவும், பௌத்த மதத்தை அரசமதமாகவும் தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு உலை வைக்கப்பட்ட நிகழ்வும் இந்த அதிகார பலத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. கடிதத்துண்டுக்கு வேலை வழங்கும் நிலை தென்பகுதியில் உருவாக்கப்பட்டது. ஆனாலும் தென்பகுதி இளைஞர்களுக்கு இது போதுமானதாக அமையவில்லை இந்த யதார்த்த நிலையின் காரணமாகவே தென் இலங்கை இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார். இதுவே அன்றைய தென் இலங்கை யதார்த்த நிலையாகும். அன்று ஜே.வி.பியின் ஒரு கோசமாக கொழும்புக்கு கிரி கமட்ட கக்கிரி என்று அமைந்திருந்தது. இதன் அர்த்தம் கொழும்புக்கு பால் கிராமத்துக்கு கெக்கரிக்காய் என்பதாகும். எனவே வசதி படைத்தார்கள் வாழும் மேற்கு மாகணம் நன்மை பெற சிங்கள கிராமங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பதே ஆதங்கமாக இருந்தது. ஆனால் வடக்கு கிழக்கு மக்களின் இதே நிலையை ஜே.வி.பியினர் புரிந்து கொள்ளாமல் இருப்பது வினோதமாகும்.

இன்று வடக்கு கிழக்கு பகுதி மக்களின் சொத்தான சாம்பூர் நிலப்பகுதி அந்நிய நாட்டுக்கு போனதற்கு உரிய பாவத்தின் ஒரு பகுதி ஜே.வி.பிக்கு உரியதாகும். இதே போன்ற பாரிய இழப்புகள் வடக்கிழக்கு மக்களுக்கு ஏற்படலாம்.

தென் இலங்கையில் 72000 இளைஞர் யுவதிகள் தமது எதிர்கால நன்மைக்காக போராடி உயிர் நீத்தனர். அதே போன்று வடக்கு கிழக்கு இளைஞர் யுவதிகள் தமது உரிமைகளை பெறுவதற்காக போராடி உயிர்நீர்த்துள்ளனர். ஆனால் இதில் உள்ள சோகம் என்ன வென்றால். ஜே.வி.பியின் தூண்டுதலாலேயே வடக்கு கிழக்கு இளைஞர்கள் அழிக்கப்பட்டமையாகும். இந்த பாவத்தில் ஜே.வி.பிக்கு முழுபங்கு உண்டு.

வடக்கு கிழக்கு மக்களின் உரிமை போராட்டம் 60 ஆண்டு கால வரலாற்றை கொண்டது. தென் இலங்கை சிங்கள பௌத்த பேரினவாதத்தின் புறக்கணிப்பாலேயே இந்த எதிர்ப்பு அலைமேல் வந்தது. எனவே இந்த நியாயமான விடுதலைப் போராட்டம் ஜே.வி.பியின் முற்று முழுதான ஆதரவுடனேயே ஒடுக்கப்பட்டது. இதன் விளைவாகவே இன்று 1200 தமிழ் விவசாய குடும்பங்கள் இந்தியாவினால் தமது வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு உள்ளனர். இன்று இந்திய முதலாளித்துவமும், இலங்கை முதலாளித்துவமும் கைகோர்த்து தேன் நிலவைக் கழிக்க முயலும் போது தம்மை அழைக்கவில்லையே என்பது தான் ஜே.வி.பியின் ஆதங்கமாக உள்ளது.

ஜே.வி.பி தமது வரலாற்றில் விட்ட தவறுகளை உணர்வார்கள் என்றால், சிறையிலே இருக்கும் ஜென்ரல் சரத்பொன்சேகா யுத்த வெற்றி விழாவை கொண்டாட முடியவில்லையே என அழுவதைவிட வடக்கு கிழக்கு தென் இலங்கை இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை பற்றி யோசிக்க தற்போது நல்ல தருணம் ஏற்பட்டுள்ளது. எமக்கு தெரிந்த அளவில் அத்நகைய நிலை ஒரு போதும் கனியமாட்டாது ஏனென்றால் ரில்வின் சில்வாவின் அண்மைய பத்திரிகை அறிக்கை அதை வெளிப்படுத்துகிறது "யாழ்ப்பாண மக்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டிய அவசியம் இல்லை அவர்கள் தமது நாளாந்த கருமங்களை ஆற்றிக்கொண்டு தேர்தல் காலங்களில் வாக்களிக்க அவர்களால் முடிந்தால் அது போதுமானதாகும்" இதுவே அவர் உதிர்த்திருக்கும் கருத்தாகும். இதை விட வேறு கருத்தை எப்படி ஜே.வி.பியிடம் எதிர்பார்க்க முடியும். ஏனென்றால் வடக்கு கிழக்கு தெற்கில் வாக்களிப்பது சாதாரண மக்களே. தென்பகுதியில் ஜே.வி.பிக்கு வாக்களிப்பது சாதாரண மக்களே இதை தனது அரசியல் பலம் என்று ஜே.வி.பி கூறுகிறது. இதேநேரம் வடக்கு கிழக்கில் வாக்களித்தவர்கள் சாதாரணமக்களே ஆனால் வடக்கு கிழக்கு மக்களின் வாக்களிப்பை இவர்கள் கருத்தில் எடுக்கவில்லை என்றே தோன்றுகிறது. இதன் மூலம் தெற்கை விட வடக்கு கிழக்கு மக்கள் தெளிவாக உள்ளனர் என்பது ஜே.வி.பி யின் மனசாட்சிக்கு தெரியும் இந்த உண்மையை இனவாதிகளின் மேடைகளில் அவர்களது பேச்சில் உணரக்கூடியதாக இருக்கிறது இன்று நாம் அனுபவிப்பது இதன் விளைவுகளேயாகும். எனவே இவர்களிடம் இனவாதத்தை தவிர வேறு எதுவும் இல்லை இந்த வெட்கக் கேடான நிலமையை மறைப்பதற்காக தமிழ் மாணவர்களுக்காக ஜே.வி.பி மாணவர் அமைப்பு போராட முன்வந்துள்ளது நாம் கேட்பது இந்த போராட்டம் உண்மையானதா என்பதையே சாம்பூர் மக்களுக்காக இன்று ரில்வின் சில்வா கண்ணீர் வடிப்பது உண்மையான கண்ணீரா? அல்லது கிளிசரின் போட்டதால் நடிகர்களுக்கு வரும் கண்ணீரை போன்றதா? அன்று கதிர்காம புனித பூமியில் மனம் பேரி நிர்வணமாக ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்டாள் இந்த வாசனையுடன் கைதடியில் கிருசாந்தி குமாரசாமி கொலை செய்யப்பட்டாள், சூரிய கந்தை புதை குழி அனுபவம் செம்மணி புதை குழியில் வெளிப்பட்டது எனவே வடக்குகிழக்கில் நிலை கொண்டுள்ளவர்கள் தம்மது ஆயுதங்களுடன் தென்பகுதி நகர்வதற்கு வெகு நாட்கள் ஆகாது வடக்கு கிழக்கு நோக்கி இராணுவம் நகரும் போது வெற்றி பாடல்களும், மத நிகழ்வுகளும் ஒலிக்கப்பட்டது ஆனால் அதே படை தெற்கு நோக்கி வரும் போது ஆந்தைகள் அலறும் அதுவரை ரில்வின் சில்வாவின் முதலைக்கணிணீர் சொரிந்து கொண்டே இருக்கும்

- விஜே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வவுனியா போராட்டம்

கடந்த 24.05.2010 அன்று காணாமல் போனோரைத் தேடியறியும் குழு வவுனியா பஸ் நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தை நடத்தியிருந்தது. ஆயிரக்கணக்கில் காணாமல் போய் இருக்கும் எமது உறவுகளைப் பற்றி அரசாங்கத்தினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஆயிரக் கணக்கில் மக்கள் இப்போராட்டத்தில் கலந்து கொண்டதுடன் தமது நிலைப்பாட்டை வலியுறுத்தும் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். வன்னிப் பகுதியில் இறுதியுத்தம் நடைபெற்ற போது எண்ணற்றோர் காணாமல் போயிருந்தனர். அரசாங்கம் இந்த நிகழ்வை வெற்றி விழாவாக கொண்டாட எடுத்த முயற்சிகள் இயற்கையின் சீற்றத்தால் இரத்துச் செய்யப்பட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எமது போராட்டத்தை மே 18ம் திகதியே நடத்த இருந்தோம் எமது போராட்டமும் இயற்கையின் சீற்றத்தால் 18ம் திகதி நடத்தமுடியாமல் போய் இருந்தது. தென் இலங்கையில் இருந்து வெகு ஜன பிரதிநிதிகள் இப் போராட்டத்தில் கலந்து கொள்ள ஆர்வம் காட்டியதால், இப்போராட்டத்தை எப்படியும் நடத்த வேண்டும் என்ற உறுதியுடன் 24ம் திகதி நடத்தி முடித்தோம்.

தமிழ் மக்களின் துயர நிகழ்வை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சோக நாளாக அனுட்டிக்குமாறு வெண்டுகோள் விடுத்திருந்தது. ஆனால் மேற்படி காலப்பகுதியில் போராட்டங்கள் எதனையுமு' நடத்தாமல் கோவில்களில் வழிபாட்டுடன் தமது செயற்பாட்டை மட்டுப்படுத்திக் கொண்டனர்.

**பெருமாள் பூமிநாதன்.**

காணாமல் போனோரை தேடியறியும் குழு மாத்திரமே தனித்து மறியல் போராட்டத்தை நடத்தியிருந்தது. எமது போராட்டத்தை சில தமிழ்த் தினசரி பத்திரிகை இருட்டடிப்பு செய்தது எமக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. எமது போராட்டம் நடைபெற்ற பின்னர் ஜே.வி.பியினர் யாழ்ப்பாணத்தில் காணாமல் போயிருந்த சில குடும்பத்தினரை கொழும்புக்கு அழைத்து பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தியிருந்தனர். ஜே.வி.பி தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள ஆதங்கம் புரியாத புதிராக உள்ளது. தமிழ் மக்கள் பேரழிவுக்கு காரணமான யுத்தத்தை இறுதி வரை ஜே.வி.பி. ஆதரித்தது இந்த யுத்தத்தின் கொடுமையாலேயே தமிழ் மக்கள் இவளவு துயர நிலைக்கு ஆளாகினர்.

தமிழ் மக்கள் ஏன் போராடினர் தமது உரிமைக்காக அவர்கள் போராடினர். தமிழ் மக்களின் உரிமை தொடர்பான விடயத்தில் ஜே.வி.பி. இன்றும் எதிரான நிலைப்பாட்டு உடனேயே உள்ளது. அண்மையில் ஜே.வி..பி தலைவர் ரில்வின் சில்வா பேட்டி ஒன்றில் தமிழ் மக்களுக்கு வாழ் வாதாராங்களை வழங்கினால் போதும் , உரிமை பற்றிய விடயம் தேவை இல்லை என கூறியுள்ளனர். எனவே ஜே.வி.பி. யின் முதலைக் கண்ணீரை தமிழ் மக்கள் நம்ப போகின்றார்களா? என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

பேரினவாத தளத்தில் இருந்து சிறிதளவும் அசையாத நிலைப்பாட்டில் இருக்கும் ஜே.வி.பியை எம்மால் எப்படி நம்பமுடியும். காணாமல் போனவர்கள் தொடர்பாகவும் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகவும் எமது போராட்டம் தொடரும்.

எமது போராட்டத்தில் எத்தகைய அரசியல் சுயநலமும் பேணப்படவில்லை. உண்மையில் இம் மக்களின் துயரங்களுக்கு விடிவு காண்பதே எமது ஒரே நோக்கமாகும். 15க்கு மேற்பட்ட போராட்ட நடவடிக்கைகைகளை மேற் கொண்ட நாம், வவுனியாவில் இரண்டு போராட்ட நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளோம். எமது அடுத்த போராட்டம் யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது. இதற்கான ஆதரவு பல்வேறு மட்டங்களில் பெறப்பட்டுள்ளது. யாழ்ப்பாண போராட்டத்துக்கு உங்கள் அனைவரினதும் பரிபூரண ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றோம்.

......4 பக்கத்தின் தொடர்ச்சி

## ஐக்கிய தேசிய.......

ஜே.ஆரின் இரண்டாவது வருகை என்று குறிப்பிட முடியும். எனவே ஐக்கிய தேசியக் கட்சியால தம்மை போன்ற ஒரு அமைப்பின் சவாலை எப்படி சமாளிக்க முடியும் எனவே ரணில் விக்கிரமசிங்கா இந்த நிலைமைகளை நன்கு விளங்கியுள்ளார். என்பதே எனது கருத்தாகும். ரணில் மகிந்தராஜபக்சவை வசதிபடைத்தவர்களின் சந்தைப் பொருளாதார முறைமையின் எதிரியாக இனம் காணவில்லை. இவர் மகிந்தாவை சார்ந்ததன் நோக்கம் மகிந்தாவுக்கு வழிகாட்டவும் சர்வதேச உறவுகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதை தெளிவுபடுத்தவே ஆகும் அரசியல் மொழியில் சொன்னால் மகிந்தலை ரணில் தனது தாராளவாத சகோதரரானகவே கொள்கிறார் என்றே கூறவேண்டும்.

வசதி படைத்த வகுப்பு

ஐக்கிய தேசிய கட்சியின் எந்த ஒரு தலைவரையும் திறமையாளனவராக நான் நினைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி சமூக ஜனநாயக சக்தியாக தொழிற் சங்கங்களை உள்ளடக்கிய அமைப்பாக தன்னை மாற்றும் எனவும் கூறமுடியாது. ரணில் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர்களின் கருத்துக்களை செவிமடுப்பதாக கூறுவதைக் கொண்டே அவர் வசதிபடைத்தவர்களின் குரலாக உள்ளார் என்பது தெளிவாகிறது. குறிப்பாக தமிழ், முஸ்லிம் வர்த்தகப் பிரிவினரை உள்ளடக்கிய அடித்தளத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி இன்று உள்ளது. யாராவது இதை மாற்றி அமைத்தால் அது ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல் போகும் நிலையே ஏற்படும். இன்று பல ஐக்கிய தேசியக் கட்சி தலைவர்கள் வறுமையில் உள்ளோரைப்பற்றி பேசுகின்றனர். இதைக் கொண்டு அவர்கள் சந்தைப் பொருளாதாரத்தையோ, வர்த்தக உலகத்தையோ கைவிட்டதாக கொள்ளமுடியாது.

மலையக பிரதிநிதித்துவம் 1948ம் அண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் அட்சியில் பறித்தெடுக்கப்பட்டது. இதனால் 10 இலட்சம் மலையக மக்கள் அரசியல் அனாதைகள் அக்கப்படட்டனர். பின்னர் 27 ஆண்டுகள் கழித்தே தமது பிரதிநிதித்துவத்தை இம் மக்கள் பெற்றனர். விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் மலையக மக்களுக்கு இந்த அனுகூலம் கிடைத்தது. இந்த முறைமையின் கீழ் தெரிவான மலையக பிரதிநிதிகள் மலையக மக்களுக்கு எதையும் செய்யாமல் தமது சுகபோகத்தை மாத்திரமே கவனித்து கொண்டனர். ஆனால் அது அல்ல இப்போது ஏற்பட்டு இருக்கும் பிரச்சனை இன்று 1948ல் நடந்ததைப் போன்றதொரு நிலை உருவாக்கப்பட் உள்ளது. அதாவது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை மாற்ற வேண்டும் என்ற நிலைப்பாடு மலையக பிரதிநிதித்துவத்திற்கே குழிபறிக்கும் நிலையை ஏற்படுத்த உள்ளது. விகிதாசார பிரதிநிதித்துவ முறைமையின் கீழ் பல தீமைகள் இருந்ததாலும், தேசிய இனங்களுக்கு அது ஓரளவுக்கு நன்மையை வழங்கியிருக்கிறது என்றே கூறவேண்டும். இந்த முறைமையின் கீழ் மலையக பிரதிநிதித்துவம், ஓரளவுக்கு பாதுகாக்கப்படுகிறது. என்று வேகூறவேண்டும்.

இன்று பேரினவாத சக்திகள் இந்த நாட்டில் வாழும் பௌத்த சிங்களம் அல்லாத தேசிய இனங்கள் மீது ஒடுக்கு முறை செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. இவர்களின் இறுதி இலக்காக பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்யும் விடயம் இடம்பெற உள்ளது. பாராளுமன்ற தேர்தல் முறைமையில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் மாற்றம் கொண்டுவருவது எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

உள்ளூராட்சித் தேர்தல்களில் வேணும் என்றால் 50% விகிதத்தை தொகுதி ரீதியாகவும் 50% விகிதத்தை விகிதாசார பிரதிநிதித்துவ் முறைமையின் கீழும் நடத்தலாம். ஆனால் எக் காரணம் கொண்டும், பாராளுமன்ற தேர்தல் முறைமையில் விகிதாசாரத் பிரதிநிதித்துவத்தை தவிர்த்து ஏனைய முறைகளை ஏற்றுக் கொள்ளமுடியாது. இன்று தற்போது இருக்குமு் விகிதாசாரத் பிரதிநிதித்துவ முறைமையை மாற்றுவதற்கு நயவஞ்சக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி என்ன நிலைப்பாட்டை எடுக்க இருக்கிறததென்பது




முக்கியமானதாகும்.

தமிழ் மக்கள் மீதான யுத்தத்திற்கு இறுதிவரை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவை வழங்கியே வந்தது. அவசர காலச்சட்டத்திற்கு இன்று வரை ஆதரவை வழங்கி வருகிறது. முக்கியமான நிலைமைகளில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியை சந்தித்து ஆதரவு வழங்கி வருகின்றார். எனவே ஐக்கிய் தேசியக் கட்சி என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என எதிர்வு கூறமுடியாத ஒன்றாகும்.


சுதந்திரம் மகேந்திரன்

விகிதாசாரவ பிரதிநிதிகள் முறைமையில் மாற்றம் கொண்டு வருவதாயின் மலையக மக்களின் பிரதிநிதித்துவத்திற்கு ஆபத்து ஏற்படாது என்ற உத்தரவாதம் அரசியல் சாசன ரீதியாக உத்தரவாதப் படுத்தப்பட்ட பின்னரே மாற்றத்ததை கொண்டு வர அனுமதிக்க முடியும் இன்றுள்ள சூழ் நிலையில் மகிந்த அரசாங்கம் பேரினவாதிகளின் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுத்து வருகிறது.

எனவே இவர்களின் தேர்தல் முறைமை மாற்றம்எமது மக்களின் நலனிற்கும் எந்த வகையிலும் நன்மையை வழங்காது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

எனவே அரசாங்கத்தின் இம் முயற்சிக்கு எதிராக நாம் ஐக்கியப்பாட்ட போராட்ட நடவடிக்கைக்கு தயாராக வேண்டும்.

..........4 பக்கத்தின் தொடர்ச்சி

## ஒரு பிரச்சனை......

அமையும் என்றும் நம்பினர். ஆனாலும் இத்தகைய கிழக்கு ஐரோப்பிய சக்திகள் ஜனநாயக சோசலிசத்துக்கன செயற்பாட்டில், கடுமையான உழைப்பைச் செய்ய வேண்டும் என்ற உளரீதியான எண்ணப்பாட்டில் இருக்காததால், அந்த நிலைமை நோக்கிய நகர்வு பலவீனமாகவே இருந்தது.

கிழக்கு ஐரோப்பாவில் பல புத்திஜீவிகள் ஸ்டாலிச கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளாதவர்களாகவே இருந்தனர். இதனால் சுதந்திரத்தைப் பற்றிய அதாவது உத்தரவாதம் என்கின்ற கருத்தியல் வெற்றி பெற்றது.

பல தொழிலாளர்களும், சோசலிசம் பற்றிய கருத்தை ஏற்காதவர்களாகவே இருந்தனர். இதற்கு முக்கிய காரணம் ஊழல், ஒடுக்குமுறை நிறைந்த ஸ்டாலினிச ஆட்சி முறையே ஆகும். இதே நேரம் அனேக தொழிலாளர்கள் தாரளவாத பொருளாதார முறைமையின் தனியார் மயமாக்கல், சமூக நலன்களை குறைத்தல், போன்றவற்றுக்கு எதிராக இருந்தனர். இவர்கள் கணிசமான எதிர்ப்பு செயற்பாட்டிலும் இறங்கி இருந்தனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள சாதாரண மக்களின் வாழ்க்கைத்தரம் முதலாளித்துவ முறைமை அறிமுகப் படுத்தப்பட்ட பின் வீழ்ச்சி கண்டு இருந்தது. கடந்த 20 ஆண்டு கால நிலமைகளைப் பார்க்கின்றபோது கிழக்கு ஐரோப்பிய மக்கள் முதலாளித்துவ முறைமையில் வெறுப்புக் கொண்டவர்களாகவே உள்ளனர். கங்கேரியில் நடைபெற்ற கணிப்பீடு ஒன்றில் 72% விகித மக்கள் கம்யூனிச முறைமை நல்லது என்றே கருத்து தெரிவித்துள்ளனர் உண்மையில் ஸ்டாலிசை ஆட்சி வீழ்ச்சி ஜனநாயக சோசலிசத்தை நோக்கி நகராமல், முதலாளித்துவ மீள்நிர்மாணத்துக்கு நகர்ந்தது. இது கிழக்கு ஐரோப்பிய மக்களுக்கு மாத்திரமல்ல உலகத்திற்கும் பாரிய பின்னடைவது வழங்கியது.

ஜக்கிய அமெரிக்கரின் ஆளும் வர்க்கம் ஜேர்மன் சுவர் வீழ்ச்சியின் பின்னர் உலகத்தின் மீது தமது மேலாதிக்கம் வலுப்பெறும் என இறுமாப்பு அடைந்தனர். இந்தப் போக்கே அவர்களை ஆப்கானிஸ்தான் மீதும் ஈராக்கின் மீது ஆகக்கிரமிப்பு மேற் கொள்ள வழிவகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka

புதிய சமதர்மம்

புதிய உலகம் படைப்போம்

143/3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 0112430621 தொ. மடல். 0112305963
ஈமெயில்: putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

பதிவு செய்யப்பட்ட செய்தி பத்திரிகையாகும்

# தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு

வரலாற்றில் என்றும் இல்லாத அளவில் தமிழ் மக்கள் துயரத்துடன் வாழ்கின்றனர் தினம் தினம் தமிழ் மக்கள் மீது பேரினவாத ஒடுக்குமுறை செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இத்தகைய சூழ்நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு முனைப்புடன் செயற்படவேண்டும். பாராளுமன்ற நிகழ்ச்சிகளில் ஒழுங்காக கலந்து கொண்டு தமிழ் மக்களின் துயர நிலையை உரிய முறையில் போதிய தகவல்களுடன் வெளிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்றத்துக்கு வெளியே எடுக்க கூடிய சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இன்று தமிழ் மக்கள் மீது பேரினவாத சக்திகள் இரக்கம் கொள்வது போல் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்குமாற் போல் நடக்கின்றனர். இதற்கு இடம் அளிக்க கூடாது. எனவே தமிழ் மக்களின் மனித உரிமை விடயங்களில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிக கவனம் செலுத்த வேண்டும். இந்திய ஆட்சியாளர்களுடனும், தென் இலங்கை இனவாத தளத்துடனும் காலத்தை வீண் அடிப்பதை தவிர்த்து, இந்திய மக்களுடனும் தென்இலங்கை முற்போக்கு சக்திகளுடனும், நட்புக்கரம் நீட்டி செயற்பட வேண்டும். தென் இலங்கை தொழிலாளர் தலைமைகள் இடதுசாரி சக்திகள் ஆகியவற்றுடன் பல பொது விடயங்களில் ஒன்றிணைந்து போராட முடியும். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் சர்வதேச ரீதியான ஆதரவை இதுவரைபெறாது இருப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைபின் கும்பகர்ண தாக்கமும் முக்கிய காரணமாகும். தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் பணி எது வென்றுதெரியாத நிலையே உள்ளது. தேசிக்காய் மூட்டயை அவிழ்த்தால் எப்படி திசைக்கு ஒரு பக்கமாக உருளுமோ அப்படித்தான் அவர்களின் ஐக்கியமும் இன்று காணப்படுகிறது.

பாராளுமன்றத்தின் மூலம் செய்யக் கூடிய பணிகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு செய்ய முன்வரவேண்டும். இன்று அத்தகைய செயற்பாடு எதிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இல்லாத நிலையே உள்ளது. காணமல் போனவர்கள், சிறையில் வாடும் கைதிகள், முகாம்களில் அடைபட்டிருக்கும் மக்கள், வெளியிலே விடப்பட்ட மக்களின் புனர்வாழ்வுஎன பணிகள் நிறைய உள்ளன இன்று யாவற்றுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ன பொறிமுறையை கொண்டுள்ளது.? ஒன்றுமே இல்லை என்பதுதான் உண்மையாகும் தனிப்பட்ட முறையில் வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்வதை விடுத்து அதை பயன் உள்ள விடயங்களுக்கு பயன் படுத்தினால் அது தமிழ் மக்களின் விடுதலைக்கு உதவி வழங்கும். இன்று இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியாக அமைச்சர் ஜி. எல் பீரிசை அனுப்பி இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டு வருகிறது. அதேபோன்று பயணங்களை மேற்கொண்டு தமிழ் மக்களின் விடுதலை போராட்டத்தின் நியாயங்களை வலியுறுத்த தமிழ் தேசிய கூட்டமைப்பு ஏன் முயலக்கூடாது. தமிழ் மக்களின் விடுதலையானது தமிழ் மக்களின் விடுதலை போராட்டங்களின் மூலமும், தென் இலங்கை மக்கின் ஆதரவுடனுமே பெற்றுக் கொள்ள முடியும். அத்தகைய பணிகளையே கூட்டமைப்பு செய்ய முன்வரவேண்டும்.

வாசகர்களுக்கு..!
உங்கள் கருத்துக்களை தவறாது எழுதுங்கள் மாற்றுக் கருத்துக்களாயினும் பிரசுரிப்போம். உங்கள் ஆதரவு எங்கள் பணிகளை ஊக்குவிக்கும்

தொடர்பு முகவரி

வாசகர் கருத்துக்களம்
புதிய சமதர்மம்
143 /3 கீயு வீதி கொழும்பு. 02
தொ. பேசி. 2430621 தொ. மடல். 2305963
putiyasamadarmam143@gmail.com
இணையத்தளம்: www.nssp.info

கிருசாந்தி குமாரசாமி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் யாழ்ப்பாணம் சுண்டிக்குழி மகளிர் கல்லூரியில் கல்வி பொதுத் தராதர உயர் வகுப்பில் படித்து வந்தார். 1996ம் ஆண்டு செம்டம்பர் மாதம் 7ம் தேதி பாடசாலைக்குச் சென்றபோது இவர் அங்கே பௌதீகப் பாட பரீட்சையை செய்து விட்டு வீடு திரும்பினார். இவர் வீடு திரும்பும் வழியில் கைதடி இராணுவ முகாமில் இராணுவத்தால் தடுத்து நிறுத்தப்பட்டு, முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டார். மாலை 2.00 மணியளவில் இச் சம்பவம் நடந்தது. இதை அவ் வழியில் வந்த பலர் பார்த்துள்ளனர். தகவல் தாயாரன குமாரசாமி இராசம்மாவுக்கும் தெரிவிக்கப்பட்டது. கிருசாந்தி குமாரசாமியின் தாயார் இராசம்மா பாடசாலை ஒன்றில் உப அதிபர் ஆவார்.

இவருக்கு வயது 59 ஆகும். இவரது கணவர் புற்றுநோயினால் மரணத்தை தழுவியிருந்தார். இராசம்மா தனது 16 வயது நிரம்பிய மகனுடனும், அயலவரான 32 வயதுடைய சிற்றம்பலத்துடனும், தனது மகளைத் தேடி இராணுவ முகாமிற்கு சென்றிருந்தார். அன்று மாலை இவர்கள் அனைவரும் காணாமல் போய் இருந்தனர். 45 நாட்கள் கழிந்த பின்னரே இவர்கள் காணாமல்போன விடயம் வெளியே தெரியவந்தது. முகாமிற்கு அருகே ஆழம் இல்லாத பகுதியில் இவர்களது உடல்கள் புதைக்கப்பட்டு இருந்தன.




சடலங்கள் மீட்கப்பட்ட போது, இராசம்மா குமாரசாமி, சிற்றம்பலம் ஆகியோர் கயிற்றினால் இறுக்கப்பட்டு மரணத்தைத் தழுவி இருந்தனர். கிருசாந்தியும், சகோதரனும் துண்டங்களாக வெட்டப்பட்டு புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர்.

பின்னர் தெரியவந்த தகவல்களின் பிரசாரம் கிருசாந்தி 6 இராணுவத்தினரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு இருந்தார். பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்தவரை குழுவாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி இருந்தனர். எனக்கு தண்ணீர் தாருங்கள், எனக்கு களைப்பாக இருக்கிறது, எனக்கு 5 நிமிடங்கள் ஓய்வு தாருங்கள் இதுவே கிருசாந்தி பேசிய இறுதி வார்த்தைகளாகும். இதன் பின்னர் இவர்கள் கிருசாந்தியைக் கொலைசெய்து விட்டனர்.

பிரேமாவதி மனம்பேரி கதிர்காமத்தில் வைத்து லெப்ரினன் விஜய சூரியாவின் உத்தரவின் பேரில் 3வது கெமுனு யுனிட்டை சேர்ந்த அமரதாச ரத்னாயக்கா, என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கிரு சாந்தி கொலை செய்யப்பட்டு 25 வருடங்களுக்கு முன்னர் பிரேமாவதி மனம்பேரி சுடப்பட்டு தரையில் சாய்ந்தார்.

மன்னம்பேரி இறப்பதற்கு முதல்நாள் முழுவதும், சித்திரவதை செய்யப்பட்டதோடு நிர்வாணமாக நகரத்தின் மத்தியில் கொண்டுசெல்லப்பட்டார். இதன் பின்னரே இவர் கொலை செய்யப்பட்டார். வழக்கின் முடிவில், விஜய சூரியா, அமரதாச ரத்னாயக்கா, ஆகியோர் குற்றவாளிகளாக காணப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. பயங்கரவாதத்தை முறியடித்தவர் என்பதற்காக விஜய சூரியாவின் தண்டனை பின்னர் குறைக்கப்பட்டது.

கிருசாந்தி, மனம்பேரி ஆகிய இருவரும் கொடூரம் நிறைந்த கொலைக்கு ஆளானவர்கள் என்பதற்கு ஞாபகச் சின்னங்களாக உள்ளனர். அரச கொடூரத்தின் வெளிப்பாட்டை இவர்களின் மரணம் தெளிவுபடுத்துகிறது. அரசாங்கம் என்பது ஒழுங்கமைக்கப்பட்ட கொடூரத்தின் வெளிப்பாடாகவே உள்ளது.

அரசு என்பது தன்னை ஒரு அப்பாவியாகவும், மக்களுக்கு சேவை செய்யும் அமைப்பாகவும் காட்ட முனைந்தாலும், இது ஒரு அடக்குமுறை கருவியாகும்.

சமூகத்தின் ஒரு பிரிவை காப்பாற்ற முயலும் அமைப்பாகும். அவர்களின் தேவைகளை பாதுகாக்கிறது. இதனுடைய போர்வையை அகற்றினால் சுயரூபத்தை பார்க்க முடியும். அரசின் மூர்க்கத்தன்மையான குணாம்சத்தை அது சவாலை எதிர்கொள்ளும் போது அறியமுடியும்.

இலங்கையில் மத்திமப்படுத்தப்பட்ட சிங்கள அரசு மூன்று முறை சவாலுக்கு உள்ளானது இதன் போது தன்னை எதிர்த்தவர்களை அழித்து ஒழித்தது. இது 1971ல், 1988ல் ஈழப் போரின் போது இது நடைபெற்றது. இந்த மூன்று நிகழ்விலும், போலி ஜனநாயக திரை அகன்று கேள்வி கேட்டவர்களை இரக்கமற்ற முறையில் நசுக்கினர். தனது இயந்திரத்தை இதற்காக முழு அளவில் உபயோகித்தது. இராணுவம் பிரதான கருவியாக மாறி அரசின் உத்தரவை நிறைவேற்றியது. சாதாரண சிங்கள தமிழ் மக்க அரச பொரியானது மனிதராகப் பார்க்கவில்லை. வெறும் சடப்பொருளாகவே பார்க்கின்றது. எனவேதான் மனம்பேரி இரக்கமற்ற முறையில் கொல்லப்பட்டார். அவர் ஒரு மனிதர் என அரசு பொறிபார்க்கவில்லை எனவே கிருசாந்தியும், சகோதரனும் மனிதர்களாக இவர்களுக்கு தெரியவில்லை. இவர்களை சடப்பொருளாக எண்ணி துண்டங்களை வெட்டிப் புதைத்தனர்.

மனம் பேரியும், கிருசாந்தியும், வடக்கு, தெற்கு பகுதிகளில், கொடூரம் நிறைந்த கொலைகளின் ஞாபகச் சின்னங்களாக உள்ளனர். இந்த இளம் பராய்த்தினரை கொலை செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் இத்தகைய கொலைகளை செய்யுமாறு உத்தவிட்ட அரச இயந்திரம் இன்றும் இறுமாப்புடன் நிமிர்ந்து நிற்கிறது.

காலணித்துவத்திற்கு பின்னரான இலங்கையின் வரலாற்றை நாம் மீண்டும் எழுதவேண்டும். இந்த வரலாறு மனம்பேரி, கருசாந்தி ஆகியோரின் இரத்தத்தாலும் கண்ணீராலும் எழுதப்படவேண்டும். இன்றைய வரலாறு ஆனது இவர்களின் துயரங்களை குருதியையும் கண்ணீரையும் கொண்ட வரலாறு ஆகும். இது பண்ராடநாயக்கா, பிறேமதாசாக்களை, ராஜபக்சாக்கள் ஜீவகாருணுயத்தின் வரலாறு அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org